# தொழிலாளி

இலங்கை தொழிலாளர் வர்க்கத்தின் வார இதழ்

மலர் 8 ● இதழ் 46 ● 4 ஜனவரி 1971 ● பக்கங்கள் 8 ● விலை சதம் 15

**மாசேதுங் சிந்தனை**

வர்க்க சமுதாயத்தில், புரட்சிகளும், புரட்சி யுத்தங்களும் தவிர்க்க முடியாதவை. அவை இல்லாவிட்டால்; சமுதாய வளர்ச்சியின் எந்தவொரு பாய்ச்சலையும் நிறைவேற்ற முடியாது; பிற்போக்கு ஆளும் வர்க்கங்களைத் தூக்கியெறிவது சாத்தியமாகாது; எனவே மக்கள் அரசியல் அதிகாரத்தைப் பெறுவதும் அசாத்தியம்.

# இ.போ.ச. போனஸ் போராட்டம் தரும் பாடம்

கடந்த டிசம்பர் மாதம் 12ந் திகதியளவில் முன்னெப்பொழுதுமே நடைபெற்றிராத, எதிர்ப்பார்த்திராத சம்பவம் ஒன்று நடைபெற்றது. சென்ற பொதுத் தேர்தலில் முக்கூட்டணியினர் வெற்றியீட்டிய பின்னர் முதல்முறையாக இ.போ.ச. தொழிலாளர்கள் செய்த வேலைநிறுத்தத்தையே நாம் குறிப்பிடுகிறோம். இ.போ.ச. தொழிலாளர்களில்—குறிப்பிட்ட ஒரு சில ஊறிய யு.என்.பி. ஆதரவாளர்களைத் தவிர — பெரும்பாலானோர் முக்கூட்டணி அரசாங்கத்தின் ஆதரவாளர்கள் என்பது சகலரும் அறிந்த உண்மை, இது இயற்கையானதே. ஏனெனில், பஸ் போக்குவரத்து சேவையை தேசியமயமாக்கியது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முதலாவது பிரதமரேயாகும். இதை பஸ் தொழிலாளர்கள் மறக்கவில்லை.

சென்ற பொதுத் தேர்தல் முடிவடைந்த பின்னர் சில பஸ் டிப்போக்களில் முக்கூட்டணி ஆதரவாளர்கள், முக்கூட்டணி அபேட்சகர்களை ஆதரிக்காத தொழிலாளர்களை மிக மோசமாகத் துன்புறுத்தினார்கள். காலஞ்சென்ற பண்டாரநாயக்காவின் படத்துக்கு முன்னால் மண்டியிட்டு வணக்கஞ் செலுத்தச் செய்ததோடு, வேறுவழிகளிலும் இம்சை செய்தார்கள். சமசமாஜ அமைச்சரும், இ. போ. ச. தலைவரும் வெறுமனே இதைப் பார்த்துக் கொண்டுதான் இருந்தார்கள். இன்று கூட நூற்றுக் கணக்கான இ. போ. ச. தொழிலாளர்கள் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள்.

இந்த முக்கூட்டணிக் கட்சிகளை பொதுத் தேர்தலில் ஆதரித்து, அவர்களின் வெற்றியைக் கொண்டாடிய அதே முக்கூட்டணியின் ஆதரவாளர்கள், தாங்கள் ஆதரித்த அரசாங்கத்துக்கு எதிராக இந்த வேலைநிறுத்தத்தைச் செய்தார்கள். இந்த மாற்றத்துக்குக் காரணம் என்ன? ஒரே வார்த்தையில் கூறுவதானால், இம் மாற்றத்துக்குக் காரணம் ஏமாற்றமே.

இ. போ. ச. தொழிலாளர்களின் கோரிக்கை நியாயமானதாகும். 1964ம் ஆண்டு முதல் அதாவது, இன்றைய இ.போ.ச.வின் தலைவர் அன்று இ.போ.ச.வின் அமைச்சராக இருந்த காலம் தொட்டு வருடந்தோறும் கிறிஸ்மஸ் காலத்தில் போனஸ் பெற்று வந்துள்ளார்கள். இந்த போனஸ் அவர்களின் வேலை நிபந்தனைகளில் ஒன்றாகிவிட்டது. இவ்வருடம் போனஸ் தருவதாக வாக்களிக்கப்பட்டது. இந்த வாக்குறுதி வானொலி மூலம் ஒலிபரப்பப்பட்டது. போனஸ் கொடுப்பதற்காக பணம் பல டிப்போக்களுக்கு அனுப்பப்பட்டது. இந்த நிலையில், எதுவித முன் அறிவித்தலுமின்றி, கலந்தாலோசனைகளுமின்றி அரசாங்க கூட்டுத்தாபனங்களில் கடமையாற்றும் ஊழியர்களுக்கும் போனஸ் அளிக்கப்படக் கூடாது என அமைச்சர்கள் சபை தீர்மானித்தது. இத் தீர்மானம் சகல கூட்டுத்தாபனங்களுக்கும் உரியதாக இருந்த போதிலும், இது, குறிப்பாக இ. போ. ச. தொழிலாளர்களைப் பாதித்தது. ஏனெனில், சில கூட்டுத்தாபனங்கள் ஏற்கனவே போனஸ் வழங்கி விட்டன.

இ. போ. ச. ஊழியர்களின் அதிருப்தி நியாயமானது. இயற்கையானதும் கூட. பல தொழிலாளர்கள் கிடைக்கப் போகும் போனஸை நம்பி கடன் வாங்கிச் செலவும் செய்து விட்டார்கள். இ. போ. ச. விலுள்ள முக் கூட்டணி தொழிற்சங்கங்களின் தலைவர்களைக் கூட அமைச்சர் சபையின் தீர்மானம் கதிகலங்கச் செய்து விட்டது. கடைசி நிமிடத்தில் அரசாங்கம் போனஸை ரத்துச் செய்ததற்கான காரணத்தை தொழிலாளர்களுக்கு இவர்களால் விளக்கிக் கூற முடியவில்லை. தொழிலாளர்கள் பலர் பல பிரச்சினைகளைக் கிளப்பினார்கள். போனஸ் போன்ற முக்கியமான பிரச்சினையில் தீர்மானம் எடுப்பதற்கு முன்னர் இ. போ. ச. விலுள்ள தொழிலாளர் ஆலோசனை சபைகளைக் கலந்தாலோசிக்காமல் விடும்போது, இத்தகைய சபைகளைத் தெரிவு செய்வதனால் என்ன பலன் இருக்கிறது என்று அவர்கள் கேள்விக் கணையைத் தொடுத்தார்கள். அரசாங்கமும், இ. போ. ச. நிர்வாகமும் எடுக்கின்ற விரும்பத்தகாத தீர்மானங்களை தொழிலாளர்களுக்கு அறிவிப்பதற்காகவா இச் சபைகள் நியமிக்கப்படுகின்றன என அவர்கள் முக்கூட்டணித் தலைவர்களைக் கேட்டார்கள். வேறு வார்த்தையில் கூறுவதானால், இச் சபைகள் ஒருவித இடிதாங்கிகளா? தொழிலாளர்களுக்குப் போனஸ் கொடுக்க பணம்

◎ 8-ம் பக்கம்

## தலைவர் மாஓ மிக நீண்ட நெடுவாழ்வு வாழ்க

தோழர் மாசேதுங்,
தலைவர், மத்திய கமிட்டி,
சீன கம்யூனிஸ்ட் கட்சி.

பேரன்புக்கும் மதிப்புக்குமுரிய தோழரே,

உங்களது 77வது பிறந்த தினத்தில், உங்களுக்கு மிக மிக நீண்ட ஆயுள் கிட்ட வேண்டும் என்று இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டியின் சார்பிலும் அதன் உறுப்பினர்கள் அனைவரதும் சார்பிலும், எமது நாட்டின் புரட்சிகர இயக்கத்தின் சார்பிலும் நாங்கள் தோழமையுடன் தெரிவிக்கும் குதூகல மிக்க வாழ்த்துக்களையும், நல்லாசிகளையும் அன்புடன் ஏற்றுக் கொள்ளுங்கள்.

இத் தினத்தில் உங்களை வாழ்த்துவதன் மூலம் நாம் மகத்தான, உன்னத, தவறற்ற சீன கம்யூனிஸ்ட் கட்சியின் ஒப்பாரும் மிக்காருமற்றத் தலைவரை, மார்க்சிஸம் - லெனினிஸத்தின், சர்வவியாபகமான உண்மைகளை சீனத்தின் யதார்த்த நிலைமைகளுக்கு ஏற்ப பிரயோகித்து, [illegible], நீண்ட கால சீனப் புரட்சிக்கு வெற்றிகரமாகத் தலைமையளித்த எமது சகாப்தத்தின் மாபெரும் மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்டை பெருமையுடன் வாழ்த்துகிறோம்.

உங்களை வாழ்த்துவதன் மூலம் நாம், மார்க்சிஸம் - லெனினிஸத்தின் உண்மைகளை விஸ்வாசத்துடன் பாதுகாத்து, நவீன திரிபுவாதத்தின் நச்சுத்தனமான தத்துவங்களை முறியடிக்க உலகெங்குமுள்ள மார்க்சிஸ்ட் - லெனினிஸ்டுகளுக்குத் தலைமையளித்த, எமது சகாப்தத்தில் சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தின் தன்னிகரற்ற தத்துவாசிரியரை, சர்வதேச பாட்டாளி வர்க்கத்தினதும், சகல ஒடுக்கப்பட்ட மக்களினதும் புகழ்பூத்த தலைவரை வாழ்த்துகிறோம். மேலும், உங்களை வாழ்த்துவதன் மூலம் நாங்கள், மதிநுட்பத்தோடும், தீர்க்கதரிசனத்தோடும் தாமாகவே மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியைத் துவக்கி அதற்குத் தலைமைதாங்கி அதன்மூலம் உலகிலே பெரும் மக்கள் தொகையைக் கொண்ட நாட்டில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைப் பாதுகாத்து, பலப்படுத்தி அதன் மூலம் சோவியத் யூனியனில் நிகழ்ந்ததைப்போல சீனாவிலும் முதலாளித்துவம் மீண்டும் தலைதூக்க விடாமல் தடுத்து, சீனத்தை உலகப் புரட்சியின் செந்தளமாகப் பாதுகாத்துள்ள ஒரு மகா புருஷரை வாழ்த்துகிறோம்.

இந்த மாபெரும் வெற்றிகளை ஈ... டிப் பூர்வமாகவும், மேதாவிலாசத்தே... னிஸத்தைப் புதிய கட்டத்திற்கு. இ... தனை என்று அழைக்கின்ற கட்டத்திற்... னீர்கள். உங்களை வாழ்த்துவதன் மூ... முள்ள ஒடுக்கப்பட்ட மக்களை அவர்கள்... திச் செல்லும் ஒரேயொரு - மிகவும் வ... துவஞானமான மாசேதுங் சிந்தனை... புகழ்கின்றோம்.

உங்களது பிறந்த தினத்தின்போது ... னிஸம். மாசேதுங் சிந்தனையைக் கற்கவும், ... கொள்ளவும், அதை மிகவும் தீவிரமாகக் கி... வும், இலங்கையின் யதார்த்த நிலைமைகளுக்கே... யோகிக்கவும் நாங்கள் சங்கற்பம் கொள்கிறோ... த்தில் அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களையும் அவர்களின் சகல ஏவல் நாய்களையும் ஒழித்துக்கட்ட உலக மக்கள் அனைவரையும் ஒன்றுபடுமாறு நீங்கள் விடுத்த மகத்தான அறைகூவலை ஏற்றுச் செயல்பட எமது நாட்டு மக்களை அணிதிரட்ட நாங்கள் திட சங்கல்பம் கொள்கிறோம். சோவியத் சமூக - ஏகாதிபத்தியத்தையும், சகலவிதமான நவீன திரிபுவாத, சீர்திருத்தவாத வெளிப்பாடுகளையும் எதிர்த்து விட்டுக் கொடுக்காது, ஊசலாட்டமின்றிப் போராட நாம் உறுதி பூணுகின்றோம்.

புரட்சியே இன்று உலகில் பிரதான போக்காக இருக்கிறது என்ற உங்களது ஆய்வை நாங்கள் முழுமையாகவும் மனப்பூர்வமாகவும் ஏற்றுக்கொள்வதுடன்; அந்நிய ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம், தரகு முதலாளித்துவம் ஆகியவற்றுக்கு எதிராக ஒன்றுபடுத்தக்கூடிய சக்திகள் அனைத்தினதும் புரட்சிகர ஐக்கிய முன்னணி ஒன்றைத் தொழிலாளர் வர்க்கத்தின் தலைமையில் கட்டி எழுப்புவோம் என்றும்; அந்நிய ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம், தரகு முதலாளித்துவம் ஆகியவற்றைப் பரிபூரணமாகவும் இறுதியாகவும் தூக்கி எறியச் செயல்படுவோம் என்றும் வாக்குறுதியளிக்கின்றோம்.

இறுதியாக, உலகப் புரட்சியை வெற்றிநோக்கி வழிநடத்திச் செல்ல நீங்கள் மிக மிக நீண்ட நெடுவாழ்வு வாழ வேண்டும் என நாம் மீண்டும் வாழ்த்துகிறோம்.

**இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி**

டிசம்பர் 24, 1970.

# "இந்தியாவின் சீன யுத்தம்"

## இந்திய பிற்போக்கு ஆட்சியாளரின் சீன எதிர்ப்பை அம்பலப்படுத்துகிறது

1962ம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் இந்திய-சீன எல்லைத் தகராறு இராணுவ மோதலாக நடந்த காலம் முதலாக இந்திய முதலாளித்துவப் பத்திரிகைகளும் அவற்றிற்கு ஆதாரமாயுள்ள உலக முதலாளித்துவ செய்தி ஸ்தாபனங்களும் அச்சம்பவத்தை கடுமையான சீன எதிர்ப்புக்கு ஏதுவாகப் பயன்படுத்தி வந்திருக்கின்றன.

உலகின் பல பகுதிகளில் அன்று பலர் முதலாளித்துவப் பத்திரிகைகள் கூறியதை முற்றாக ஏற்றுக்கொள்ள வில்லையாயினும் பிரசார அமுக்கத்தின் விளைவாய் பலருக்கு கருத்து மயக்கம் இருந்து வந்திருக்கிறது என்பதை மறுக்க முடியாது. இங்கிலாந்திலும், பிரான்சிலும் வேறு சில ஐரோப்பிய நாடுகளிலும் சிற்சில பிரமுகர்களும், பத்திரிகையாளர்களும் இந்தியாவின் சார்பில் ஏகபோக பத்திரிகைகள் கூறுவனவற்றை அப்படியே ஏற்றுக்கொள்ள இயலாது என்று கூறி வந்தபோதும் பொதுவாக, இந்தியாவைச் சீனா தாக்கியது என்ற எண்ணமே நிலை பெற்றிருந்தது.

ஜனநாயகத்தையும் "சுதந்திர உலகின்" உயர் லட்சியங்களையும் பாதுகாத்து ஆசிய நாடுகளுக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கும் சாத்வீக இந்தியாமீது எல்லைகளை விரிவுபடுத்த விரும்பும் முரட்டுத்தனம் மிக்க சீனா படையெடுத்தது எனக்கூறுவது பலருக்கு வாய்பாடமாகி இருந்தது. சமீ… ஆங்கிலப் பத்திரிகை… ன நெவில் மாக்ஸ்… ள்ள இந்தியா… ன்ற நூல்… களாக… ட நம்… ம ணி… திருக்கி… டம்ஸ்" … இந்திய… ல் 1959… வரை கட… மாக்ஸ்வெல்… எழுதியிருக்…

…ராளுமன்றத்தில்… வாரங்களாக இந்… த… எழுப்பியுள்ள வாதப் பிரதிவாதப் புயலை நோக்கும்போது இந்நூல் இந்திய ஆளும் வர்க்கத்தை எவ்வளவு உலுப்பியுள்ளது என்பது தெரிகிறது. அதே சமயத்தில் இந்தியாவின் பிரபல தினசரிகளிலெல்லாம் பெரும் பெரும் புள்ளிகள் இந் நூலைப் பற்றிப் பல கட்டுரைகளில் விமர்சனங்கள் எழுதி நூலாசிரியர் மீது பலவகையான குற்றச்சாட்டுக்களை ஆத்திரத்துடன் சுமத்தியுள்ளனர். முதலாளித்துவ பத்திரிகைகள் அனைத்தும் இந்நூலைக் கண்டித்து "இந்த மாக்ஸ்வெல் சீனாவுக்குச் சாதகமாக எழுதியிருக்கிறார்" என்று குறிப்பிட்டபோதும் "அவருடைய சில குறிப்புக்கள் மறுக்க முடியாத உண்மை" என்று ஏற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகியுள்ளன.

இத்தனைக்கும் மாக்ஸ்வெல் ஒரு சாதாரண முற்போக்குவாதி கூட அல்ல. முன்னைநாள் ஆட்சியாளரின் வாரிசு என்ற வகையில் இந்திய வரலாற்றாசிரியர்களுக்கும் - ஏன் பாராளுமன்ற அங்கத்தவர்களுக்கும்- கிடைக்காத அரசாங்க ரகசிய தஸ்தாவேஜுகள் பல அவருக்குக் கிடைத்துள்ளன. இதுவே இந்திய பாராளுமன்ற உறுப்பினர் பலருக்கு ஆத்திரம் ஏற்பட்டதற்குக் காரணமாகும். உயர்மட்டத்தில் இந்தியாவின் ரகசியங்கள் இவருக்கு எப்படிக் கிடைத்தன என்பது அவர்களது ஆத்திரமாகும். இவற்றைப்பற்றி எமக்கு அக்கறை இல்லை. இந் நூலின் உள்ளடக்கமே எமக்குப் பயன் தருவதாகும்.

நூலின் தொடக்கத்தில் இந்தியாவின் எல்லைகளின் நவீன வரலாறுபற்றி ஆசிரியர் சுருக்கமாக ஆனால், ஆணித்தரமாக விளக்குகிறார். இந்த எல்லைகள் ஏகாதிபத்தியப் போட்டா போட்டிகளின் விளைவு என்பதைத் தெளிவாக்கி விடுகிறார். அதைப்போலவே, தேசிய வளர்ச்சிக் காலத்தில் இந்தியாவும், சீனாவும் சென்ற பாதைகளையும் சுருக்கமாகக் கூறுகின்றார். 1947ம் ஆண்டு ஒகஸ்ட் மாதத்தில் ஆட்சி அதிகாரம் இந்தியர்களுக்கு மாற்றப்பட்டபோதும் சமூக அரசியற்றுறையில் அடிப்படை மாற்றம் எதுவும் நிகழவில்லை. ஏகாதிபத்திய ஆட்சிக் காலத்திலே அந்த அமைப்பைத் தாங்கிய முப்பெரும் தூண்களாகிய இந்திய சிவில் சேவை, இராணுவம், பொலிஸ் ஆகியன எத்தகைய மாற்றத்தையும் அடையவில்லை. அவற்றை இந்திய பூர்ஷுவாக்கள் அவ்வாறே கையேற்றுத் தொடர்ந்து பேணிவந்தனர். ஓரிடத்திலே மாக்ஸ்வெல் கிண்டலாகக் கூறுகின்றார். "இந்திய இராணுவத்தின் உயர் அதிகாரிகள் வெள்ளையரைப் போன்று வெள்ளைக்காரராகத் தம்மைப் பயபக்தியுடன் கருதிக்கொள்கின்றனர்" இவற்றின் விளைவாக இந்திய வெளிநாட்டுக் கொள்கையில் ஏகாதிபத்தியச் சார்பு எத்தகைய ஒளிவும் மறைவுமின்றி இருந்ததை மாக்ஸ்வெல் எடுத்துக் காட்டுகிறார்.

வெள்ளையர்கள், தமது நலனுக்குகந்தவகையில் இந்தியாவின் எல்லைக் கோடுகள், குறிப்பாக தீபெத் விவகாரம் இருக்க வேண்டுமென்று திட்டமிட்டுச் செயலாற்றி வந்தனர். வெள்ளைக்காரர்களின் கருத்தோட்டத்தைப் பின்வருமாறு சுருக்கிக் கூறுகிறார் மாக்ஸ்வெல்,

"சீனாவின் மேலாட்சியின் கீழ் செயல்படும் சுயாட்சி உரிமை பெற்ற அரசு தீபெத் என்பதைப் பெயரளவில் வைத்துக்கொண்டு, நடைமுறையில் அதனை முழுமையாக இந்திய அரசாங்கத்தைச் சார்ந்திருக்கச் செய்ய வேண்டும். ஒருபுறத்தில் சீனர்களை வெளியில் நிறுத்தவும், மறுபுறத்தில் ரஷ்யர்களை வெளியில் நிறுத்தவும் சக்திமிக்க ஓர் அமைப்பு ஏற்படுத்த வேண்டும்." இது பிரிட்டனின் பிரதானமான தீபெத் கொள்கையாக இருந்தது என்று 1912ம் ஆண்டு பிரிட்டிஷ் வெளிநாட்டலுவலகக் குறிப்பு ஒன்றின் மூலம் நிரூபிக்கிறார் மாக்ஸ்வெல். சுருங்கச் சொன்னால் இன்று பூட்டான் இருப்பது போல பெயரளவில் சுயாட்சி உடையதாயும், நடைமுறையில் இந்திய செல்வாக்குள்ளதாயும் தீபெத்தை வைத்திருப்பதே பிரிட்டிஷாரின் நோக்கமாக இருந்தது.

பிரிட்டிஷாரின் கருத்து மரபுவழி வந்த நேருவுக்கும், அவரின் கீழ் பணிபுரிந்த இந்திய சிவில் சேவை அதிகாரிகளுக்கும் இதுவே உகந்த குறிக்கோளாகத் தோன்றியது, ஆங்கில ஏகாதிபத்தியம் கடைப்பிடித்த வெளிநாட்டுக் கொள்கைக்கும், அப்போது நிலவிய எல்லைகளுக்கும் தாமே உரித்துடையவர்கள் என்று நம்பிக்கொண்ட இந்திய பூர்ஷுவாக்கள் அவை பற்றிக் கருத்துப் பரிமாறுவது கூட சரணாகதி அடைவதாகும் என்று கருதினர். இது பற்றி மிகவும் விரிவாக நூலில் விளக்குகிறார் மாக்ஸ்வெல். இரட்டைப் பேச்சு, கபடம், குருட்டுத்தனமான இலட்சியவாதம், பிறருக்கு வழிவிடாத பிடிவாதம், வரலாற்றை புனர் ஆலோசனை செய்ய மறுப்பு ஆகியன இந்திய வெளிநாட்டு அமைச்சு அதிகாரிகளின் சிறப்புப் பண்புகளாக இருந்தன என்பதை நூலாசிரியர் பல உதாரணங்களோடு நிரூபிக்கிறார்,

**செந்தூரன்**

இந்த நூலிலே, கடுமையான மதிப்பீட்டுக்கு ஆளாகும் நபர் நேரு. உண்மையில் இந்நூலின் கணிசமான பகுதி முன்னைநாள் பிரதமர் நேருவின் "உலகம் அளாவிய" பிரபல்யத்தைப் புனர் ஆய்வு செய்வதாகவே உள்ளது. பொதுவாகக் கருதப்பட்டு வருவதற்கு மாறாக நேரு பலவீனம் நிறைந்த ஒரு பிரகிருதி என்பதை மாக்ஸ்வெல் எந்தவித ஐயத்துக்குமிடமின்றி நிரூபித்துள்ளார். முதலாளித்துவப் பத்திரிகைகள் நேரு ஒரு முற்போக்குவாதி என்றும், அரசியல் தீட்சண்யம் படைத்தவர் என்றும், ஜனநாயக உணர்வுள்ள தலைவர் என்றும் கதைகட்டி வந்துள்ளன. மாக்ஸ்வெல் அடுக்கிக் கொண்டு போகும் சான்றுகளின்படி இந்தியாவின் சீன யுத்தத்திற்குக் காரணமாயிருந்த நேரு, தெளிவற்ற சிந்தனையும், அனாவசியமான அகங்காரமும், தன் முனைப்பும், திட சங்கல்ப்பமற்ற பலவீனமும், அற்பத்தனமும் நிறைந்தவராயிருந்தார் என்பது புலனாகிறது.

தீபெத்தின் தலைநகரில் ஆங்கிலேயர் ஒருவரையே இந்தியாவின் பிரதிநிதியாக அவர் தொடர்ந்து வைத்திருந்தார். அதைப் போலவே, வெள்ளைக்காரர் ஆட்சியில் கூட "தெளிவற்றதாகவும், திட்டவட்டமாக வரையறை செய்யப்படாததாகவும், காலியானதாகவும்" இருந்த எல்லைப் பிரதேசங்களில் இந்திய ஆட்சியை விரிவுபடுத்தி, பிரிட்டிஷாரே படைகளை அனுப்பத் தயங்கிய எல்லையைக் கடந்த இடங்களுக்கு இந்தியப் படைகளை அனுப்பத் தொடங்கினார். இதன் விளைவாக, சர்ச்சைக்குரிய எல்லைப் பிரச்சினையைப் புறக்கணித்து, இந்தியப் படைகளை முன்நோக்கிச் செல்ல முடுக்கி விட்டார் நேரு.

மாக்ஸ்வெல் குறிப்பிடுவது போல இக் கொள்கை "நடைமுறைக்குக் கொஞ்சமும் பொருத்தமில்லாததும், மோசமான தேசிய இன வெறி பிடித்ததுமான பகைப்படலத்தைக் கிளப்பிவிட்டது."

'முன்நோக்கிச் செல்' என்ற கொள்கை இதற்கு முன்னரும் மேனாட்டுப் பத்திரிகையாளர் சிலரால் விமர்சிக்கப்பட்டிருப்பினும் இதனை மிகவும் விரிவாக—நூலின் மையக் கருத்தாக ஆராய்கிறார் மாக்ஸ்வெல். நேருவும், அவரது வெளிநாட்டமைச்சு ஆலோசகர்களும் போட்டுவந்த தப்புக் கணக்கைப் பற்றிச் சுவைபட எழுதுகிறார் மாக்ஸ்வெல்.

"எல்லை நெடுகிலும் இந்தியா என்ன செய்தாலும் சீனா பார்த்துக் கொண்டு சும்மா இருக்கும்; தாக்கவே தாக்காது; இவ்வாறு பண்டிதர் நேருவும் அவரது சக அமைச்சர்களும் ஆரம்ப முதல் கடைசி வரையிலும் தமக்கே உரிய முறையில் அசையாத நம்பிக்கை கொண்டிருந்தனர். அந்த நம்பிக்கையே 'முன்நோக்கிச் செல்! முன்நோக்கிச் செல்!' என்ற கொள்கைக்கு வழிவகுத்தது. இராணுவ ரீதியில் தன்னைவிட மிக மிகப் பலம் வாய்ந்த அண்டை நாட்டுக்கெதிராக, இராணுவச் சவால் விடும் கொள்கைக்குக் கொண்டுபோய்விட்டது."

எல்லைப் பிரச்சனை விவகாரத்தில் இந்தியா கடைப்பிடித்த கருத்தோட்டத்திற்கு நேர் மாறானதொன்றைச் சீனா எப்பொழுதும் கடைப்பிடித்தது என்று மாக்ஸ்வெல் வாதிடுகிறார். இந்தியாவுடன் மட்டுமன்றி ஏனைய அயல் நாடுகளுடனும் அக் கொள்கையையே சீனா கடைப்பிடித்தது என்றும் எடுத்துக் காட்டுகிறார். மக்கள் சீனத்தின் மனப்போக்கைப் பின்வருமாறு இரத்தினச் சுருக்கமாக மாக்ஸ்வெல் விபரிக்கிறார். "பிரச்சினைக்குரிய எல்லைகள், கடந்தகால ஏகாதிபத்திய வரலாற்றின் மிச்சசொச்சங்கள். இவை சரிசமானமான நாடுகளுக்குள் செய்து கொள்ளப்படாத ஒப்பந்தத்தின் விளைவுகள்; உண்மையில் இவற்றை ஒப்பந்தங்கள் என்றே கூறமுடியாது. ஏனெனில், ஏகாதிபத்திய நாடுகள் இராணுவ பலத்தினால் திணித்த எல்லைக்கோடுகள் இவை. ஆகவே, தக்க சமயத்தில், இவ்வெல்லைகள் பேச்சுவார்த்தைகளின் மூலம் நிர்ணயிக்கப்பட வேண்டியன. பொதுவாகக் கொள்ளப்படும் எல்லைக் கோடுகள் பேச்சுவார்த்தைகளைத் தொடங்குவதற்கு ஓர் அடிப்படையாய் அமையக் கூடுமாயினும், அவை முற்றாகப் புனர் ஆயப்பட்டே முடிவு செய்யப்பட வேண்டும்.

இது விஷயத்தில், இந்திய வெளிநாட்டமைச்சு கடைப்பிடித்த "சிறிதும் விட்டுக் கொடுக்காத" மனோபாவம் பேச்சுவார்த்தைகள் என்ற பேச்சுக்கே இடமளிக்காது நெருக்கடி நிலைமையை உண்டுபண்ணியது. மாக்ஸ்வெலினுடைய நூலை விமர்சனம் செய்த "கார்டியன்" என்ற பத்திரிகை எழுத்தாளரான ஜோன் கிற்றிங்ஸ் என்பவர் ஓரிடத்தில் குறிப்பிட்டிருப்பது போல "இது விஷயத்தில் இந்தியர்கள் உடன்பட இசைந்தது ஒன்றுக்குத்தான். அதாவது, வரைபடத்தில் உள்ள எல்லைக் கோடுகளை பௌதீக அடிப்படையில் வரையறை செய்ய உடன்பட்டார்கள். இவ்வெல்லைக் கோடுகளின் ஏற்புடைமை ஏற்காமை பற்றி அவர்கள் விவாதிக்கத் தயாராயில்லை. அது மட்டுமல்ல. பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் இவ்வெல்லைக் கோடுகள் திட்டவட்டமாக வரையறுக்கப்படவில்லை என்ற வரலாற்று உண்மையைக் கூட அவர்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கவில்லை. இக் கோடுகள் ஓரளவுக்கு உத்தேசமானவையே என்றுகூட அவர்கள் ஒப்புக்கொள்ள மறுத்தனர்." மாக்ஸ்வெலின் கூற்றுப்படி இந்தியா 1962ம் ஆண்டுவரை பேச்சு வார்த்தைகளுக்கு இணங்க பிடிவாதமாக மறுத்தது மட்டுமன்றி, முதலில், இந்தியா உரிமை பாராட்டும் பிரதேசங்களிலி

6-ம் பக்கம் பார்க்க

# தலைவர் மாஓவின் 77வது பிறந்த தினம்

# சில கருத்துக்கள்

*1970 டிசம்பர் 26ம் திகதியன்று உலகெங்கணுமுள்ள புரட்சிகர மக்கள் மகத்தான; உன்னத, தவறற்ற சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டியின் தலைவரும், 70 கோடி சீன மக்களின் ஒருமனதான பேரன்பிற்குரிய தலைவரும், சர்வதேசியப் பாட்டாளி வர்க்கத்தினதும், உலகெங்கிலுமுள்ள ஒடுக்கப்பட்ட மக்களதும் தலைவரும், எமது சகாப்தத்தின் மாபெரும் மார்க்சிஸ்ட் – லெனினிஸ்டுமான தோழர் மாசேதுங்கின் 77வது பிறந்த நாளைக் கொண்டாடினர்.*

தோழர் மாசேதுங் சாதித்துள்ள மாபெரும் சாதனைகள் யாவற்றையுமே நாம் இங்கு சர்வ சம்பூர்ணமாக அலசி ஆராய - கணிப்பிட முயலவில்லை. ஆனால், தோழர் மாசேதுங்கின் வாழ்வையும், போதனைகளையும் படிக்குமாறு சகல புரட்சிவாதிகளையும் வேண்டிக்கொள்ள இச் சந்தர்ப்பத்தை நாம் பயன்படுத்த விரும்புகின்றோம்; அப்பொழுதுதான் அவர்கள் இன்னும் சிறந்த புரட்சிவாதிகளாக உருவாக உத்வேகங் கொள்வர். தனது சொந்த நாட்டின் புரட்சிகர இயக்கத்துக்கும், உலகத்துக்கும் பிழையற்றத் தலைமையளிக்க மேதாவிலாசம் பெற்றதோடு மாத்திரமல்லாமல், தனது இளமைப் பிராயந் தொட்டே தன்னை மனப்பூர்வமாக புரட்சிகர வாழ்வுக்கு அர்ப்பணிக்கவும், தன்னைச் சுற்றியுள்ள ஒவ்வொருவரையும் அதேபோன்று வாழுமாறு உற்சாகப்படுத்தவும் செய்த ஒரு மகா புருஷரை– தோழர் மாசேதுங் போன்ற தலைசிறந்த மேதைகளை மனித குல வரலாறு முழுவதிலுமே கண்டுகொள்வது அரிதாகும்.

தோழர் மாசேதுங்கைப் பற்றிக் கவனிக்கவேண்டிய முக்கியமான அம்சம் என்னவென்றால், தத்துவமும் நடைமுறையும் அவரில் ஒன்றுடன் ஒன்று சுமுகமாகப் பின்னிப் பிணைந்ததாகும். புரட்சிவாதிகள் என்று தம்மை அழைத்துக்கொள்ளும் பலர் செய்வதைப் போல அவர் ஒன்றை உபதேசித்துவிட்டு வேறொன்றைச் செய்யவில்லை. தோழர் மாசேதுங்கின் வாழ்வு, சீனத்தினதும் உலகத்தினதும் வறிய மக்களின் விடுதலைக்கு சர்வ சம்பூர்ணமாக அர்ப்பணித்துக்கொண்டதொரு புரட்சிவாதியின் வாழ்வாகும். வேறு எவரிலுமே காண அரிதாயுள்ள ஒரே நோக்கத்துடன் அவர் தெளிவான குறிக்கோளைப் பின்பற்றினார். பலர் அறியாமலிருக்கும் விஷயம் என்னவென்றால், மார்க்சிஸம் - லெனினிஸ உண்மைகளைக் கிரகித்துக் கொள்வதற்கு முன்னரே அவர் எதிர்காலப் புரட்சிகர வாழ்வுக்குத் தன்னைப் பயிற்றுவிக்க ஆரம்பித்துவிட்டார் என்பதாகும்.

## கற்றுக்கொள்ள வேண்டிய முக்கிய அம்சம்

விவசாயக் குடும்பத்திலே பிறந்த தோழர் மாசேதுங், தான் எந்த வர்க்கத்துக்குச் சேவை செய்யப் போகிறேன் என்பதைத் தனது வாழ்வின் ஆரம்ப காலத்திலேயே தீர்மானித்துவிட்டார். தனது வர்க்க நிலைப்பாட்டைத் தீர்மானித்துக்கொண்ட பின்னர் அவர் தான் சேவை செய்ய விரும்பிய இலட்சியத்துக்குப் பயன்படத் தனது உடலையும், மனதையும் பயிற்றுவித்ததுடன்; அதன்பின்னர், தனது இலக்கை அடையத் தனக்கு வழிகாட்டவிருக்கும் மார்க்சிஸம் - லெனினிஸத் தத்துவத்தினால் தன்னை ஆயுதபாணியாக்கிக்கொண்டார். முக்கியமான தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ள வேளைகளில் அவரது மகத்தான தத்துவார்த்த திறமையைப் பற்றியும், அவரது தந்திரோபாய வல்லமை பற்றியும், அவரது பிழையற்றத் தலைமை பற்றியும் மிகவும் எழுதப்பட்டுள்ளன. அதுபோன்று நாமும், எளிமையான வாழ்வு நடத்துவது பற்றி அவர் காட்டியுள்ள உதாரணத்திலிருந்தும், பரந்த வெகுஜனங்களுடன் தன்னை நிலைநிறுத்திக் கொள்ளவும், அவர்களுடன் சர்வ சம்பூரணமாக ஒன்றிணைத்துக்கொள்ளவும், அவர்களிடமிருந்து கற்றுக் கொள்ளவும் அவருக்குள்ள திறமையிலிருந்து படிக்கவேண்டும். இத் திறமையினால்தான் தோழர் மாசேதுங் நிலத்திலே —தான் மிக மிக நன்றாகப் புரிந்து வைத்திருந்த விவசாயிகளின் சேற்றிலே - தனது கால்களை வேரூன்றி நிற்க முடிந்தது.

இதிலிருந்து புரட்சிவாதிகள் கற்றுக்கொள்ள வேண்டியவை என்ன? வெகுஜனங்களை அசுத்தமான, அறியாமை கொண்ட மனித ஜன்மங்களாகப் பார்த்துக்கொண்டிருந்த ஒரு குட்டி பூர்ஷுவா புத்திஜீவி என்ற நிலையிலிருந்து, தொழிலாளர்களதும், விவசாயிகளதும் நலன்களுடன் சொல்லாலும் செயலாலும் தன்னை ஐக்கியப்படுத்தி, விவசாயிகளின் கால்களில் ஒட்டிக்கொண்டிருக்கும் சேற்றையும் சகதியையும் பெரும்பாலான புத்திஜீவிகளின் மனங்களில் ஒட்டிக்கொண்டிருக்கும் சேற்றைவிடப் பரிசுத்தமானவையாகக் கருத ஆரம்பித்த ஒரு புரட்சிவாதியின் நிலைக்குத் தான் உருமாறியதை தோழர் மாசேதுங்கே விபரித்துள்ளார். இத்தகைய மாற்றம் அடையாமல் ஒருவருமே உண்மையானப் புரட்சிவாதியாக மாற முடியாது.

''சுயநலத்தை'' எதிர்த்துப் போராடுவது எவ்வாறு என்பதற்கும், தனிப்பட்ட ஒருவரின் நலன்களுக்கு மேலாக கூட்டு நலன்களை வைப்பது எவ்வாறு என்பதற்கும் தோழர் மாசேதுங்கின் வாழ்வு மிளிரும் உதாரணமாகும். ஒரு நபர் சுயநலத்தினாலும், புகழ்பெற வேண்டுமென்ற ஆவலினாலும், தார்மீக இலாபங்கள் கிடைக்க வேண்டுமென்ற ஆசையினாலும், கஷ்டமற்ற, இலகுவான வாழ்க்கை வாழ வேண்டுமென்ற ஆவலினாலும் அழுத்தப்பட்டிருக்கும் வரை - அவர் மார்க்சிஸம் - லெனினிஸம் - மாசேதுங் சிந்தனையை எப்படித்தான் ஏற்றுக்கொண்டுள்ளபோதிலும் - அத்தகைய நபர் என்றுமே ஒரு உண்மைப் புரட்சிவாதியாக வரமுடியாது. உண்மையில், சுயநலமும், புகழ்பெற வேண்டும், லாபமடைய வேண்டும், கஷ்டமற்ற இலகுவான வாழ்க்கை வாழவேண்டும் என்ற ஆவலும்தான் திரிபுவாதம் வளர்வதற்குள்ள தார்மீக, சமூக அடிப்படையாகும். மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின்போது ''சுயநலத்தை எதிர்த்துப் போராடுங்கள்; திரிபுவாதத்தை ஒதுக்கித் தள்ளுங்கள்'' என்ற இரட்டைச் சுலோகத்தைத் தோழர் மாசேதுங் முன்வைத்ததன் முக்கியத்துவத்தை இது விளக்குகிறது. இதன் மூலம் அவை இரண்டுமே ஒன்றுடன் ஒன்று பிரிக்க இயலாதவை என்பதைச் சுட்டிக் காட்டினார்.

## வெகுஜனங்களுடன் ஐக்கியமானார்

தனது வாழ்க்கை முழுவதிலுமே தோழர் மாசேதுங் வெகுஜனங்களிடமிருந்து தன்னைப் பிரித்து வாழவில்லை. தனது இளமைக் காலங்களில் அவர் தனது தந்தையாரின் பண்ணையில் வேலை செய்ததுடன், விவசாயிகளின் பிள்ளைகளோடு நட்பு பூண்டார். அத்தோடு, தனது அண்டை அயலார்களுக்கு உதவி புரியவும் செய்தார். கட்சியின் ஆரம்ப நாட்களில், அவர் விவசாயிகளிடையே ஆராய்வு நடத்த கிராமப் புறங்களில் மைல் கணக்கில் நடந்தார். அத்தகைய சந்தர்ப்பங்களிலெல்லாம் அவர் வறிய விவசாயிகளோடு இருந்ததுடன், தனது வாழ்வையும் அவர்களுடன் பகிர்ந்து கொண்டார். அவரிடத்தில் புத்திஜீவியின் அகங்காரத்தனமோ, இறுமாப்போ, தற்பெருமையோ என்றும் குடியிருந்ததில்லை. பின்னர், சீனத் தொழிலாளர் — விவசாயிகள் செஞ்சேனை அணிகளில் அவர் சாதாரண ஒரு வீரனைப் போன்றே வாழ்ந்தார். அவர் அவர்களுடனேயே பயணஞ் செய்தார்; அவர்களுடனேயே சுமைகளைத் தூக்கிச் சென்றார்; அவர்கள் சாப்பிட்ட உணவையே அவரும் சாப்பிட்டார்; எதுவித விசேஷ சலுகைகளையும் அவர் எப்பொழுதுமே புறக்கணித்தார். வரலாற்றுப் புகழ்மிக்க நீண்ட பயணத்தின்போது அவர் சர்வ சாதாரணமான குகையொன்றிலேயே வாழ்ந்ததுடன், உடல் உழைப்பில் பங்கு கொள்ளவும், வெகுஜனங்களோடு சேர்ந்து விவசாய உற்பத்தியில் ஈடுபடவும் செய்தார். யெனானில் அவர் பயிர் செய்த நிலம் அங்கு விஜயஞ் செய்வோர் பார்க்கும் பொருட்டு இன்னும் பாதுகாக்கப்பட்டு வருகிறது. சமீபத்தில், சீனாவில் ஜவுளிப் பற்றுக்குறை ஏற்பட்ட பொழுது, தோழர் மாஓ ஒட்டுப் போட்ட கோட்டுக்களை அணிந்திருந்தார். அவர் விசேஷ சலுகைகள் எதனையும் விரும்பவில்லை. மகத்தான பாட்டாளி வர்க்க கலாச்சாரப் புரட்சியின் போது அவர் எப்பொழுதுமே வெகுஜனங்களிடையே செல்வதன் மூலமும், இயன்றளவு அநேகமானோரை சந்திப்பதன் மூலமும் வெகுஜனங்கள் மீது தனக்குள்ள நம்பிக்கையை வெளிப்படுத்தினார். வெகுஜனங்களை நம்புவது, அவர்கள் மீது விசுவாசம் கொள்வது, அவர்களை நேசிப்பது, அவர்களிடமிருந்து கற்பது, அவர்களைவிடத் தாம் மேலானவர்கள் என என்றுமே எண்ணாமலிருப்பது— இது சகல புரட்சிவாதிகளும் கற்றுக் கொள்ள வேண்டியதொரு பாடமாகும்.

## உதாரண புருஷர்

ஒருவரது சொந்தக் குடும்பம் எவ்வளவு முக்கியமானது என்பதை தோழர் மாசேதுங் தனது வாழ்க்கையில் காட்டினார். புரட்சிவாதியாக ஒருவர் மாற வேண்டுமானால் அவர் வீட்டை விட்டே ஓடிச்செல்ல வேண்டும் என்ற அரை வேக்காட்டுத் தத்துவங்கள் பரப்பப்பட்டுவரும் இவ் வேளையில் குறிப்பாக, இதனைப் புரிந்து கொள்வது எமக்கு மிகவும் முக்கியமானதாகும். புரட்சிவாதிகளின் வர்க்கத் தோற்றம் தாண்டிச் செல்ல முடியாத தடைக்கல்லாக இல்லாத பட்சத்தில், அவர்கள் தமக்கு நெருக்கமானவர்களை மாற்ற முறச்செய்ய முடியாவிட்டால், அவர்கள் மற்றவர்களை மாற்றுவதில் வெற்றிகாணுவது அரிது என்பதைப் புரட்சிவாதிகள் புரிந்துகொள்ள வேண்டும். தோழர் மாசேதுங்கின் பெற்றோர்கள் காலமான பின்னர், மார்க்சிஸம் - லெனினிஸத்தை அவர் ஏற்றுக் கொண்ட பின்னர் அவர் கிட்டத்தட்ட தனது முழு குடும்பத்தையுமே புரட்சிகர இலட்சியத்தின்பால் வென்றெடுத்தார். இதன் மூலம் ஒருவர் தனது சொந்தக் குடும்பத்தை எவ்வாறு புரட்சிமயப்படுத்துவது என்பதற்குச் சிறந்ததோர் உதாரணத்தை முன்வைத்தார்.

## மக்கள் யுத்தம் பற்றிய போதனை

தோழர் மாசேதுங் மேற்கொண்ட புரட்சிகர வாழ்வின் சில அம்சங்களைப் பற்றிய பொதுவான சில கருத்துக்களே இவை. ஆனால், சீனப் புரட்சியின் ஸ்தூலமான நிலைமைகளுக்கேற்ப மார்க்சிஸம்-லெனினிஸத்தின் சர்வவியாபகமான உண்மைகளைப் பிரயோகிப்பதில் அவர் வெற்றியீட்டியது

6-ம் பக்கம் பார்க்க



# தொழிற் சங்க இயக்கத்தை பு

**இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்தின் (சி.டி.யு.எப்.) அங்கத்தவர்களுக்கு பொதுச் செயலாளர் விடுத்த அறிக்கையில் முக்கிய பகுதியை இங்கு பிரசுரிக்கிறோம்.**

**-ஆர்.**

இப்பொழுது நாம், சர்வ தேச மார்க்சிஸம்-லெனினிஸ இயக்கத்தின் ஒரு பகுதிக்குள் கணிசமானளவு குழப்பத்தை உண்டுபண்ணிய மிக முக்கியமான ஒரு விஷயத்தை விவாதிக்கவேண்டிய கட்டத்திற்கு வந்திருக்கிறோம். இந்தக் குழப்பம் சிறிய அளவினதாயினும், எமது கீழ்மட்டத்திலும் பிரதிபலித்திருக்கிறது. ஆக்வேதான், முழுதாகவும், வெளிப்படையாகவும் இதை நாம் விவாதிக்கவேண்டும்.

தொழிற் சங்கங்களுக்கும், தொழிற்சங்கப் போராட்டங்களுக்கும் புரட்சிகர அரசியல் போராட்டத்தோடு உள்ள தொடர்பின் பாத்திரம்தான் அந்த விஷயமாகும். முதலாளித்துவத்தின் ஆரம்ப காலத்தில் தொழிலாளர்கள் தொழிற் சங்கம் அமைக்க முயற்சி செய்தபோது முதலாளிகளின் கடும் எதிர்ப்புகளுக்கு ஆளாயினர் என்பது தொழிலாளி வர்க்கம் பொதுப்படையாக அறிந்த ஒரு விஷயமாகும். ஆனுல், காலப்போக்கில் முதலாளி வர்க்கம் புத்திசாலியாக வளர்ந்தது. தொழிலாளர்களின் தொழிற் சங்கம் அமைக்கும் உரிமையையும், கூட்டாகப் பேச்சுவார்த்தை நடத்தும் உரிமையையும், வேலைநிறுத்தம் செய்யும் அவர்களின் உரிமையையும் கூட அங்கீகரிப்பது தனது நலன்களுக்காகவே என்பதை இந்த வர்க்கம் உணரத் தலைப்பட்டது. சிலவேளைகளில், இதற்கு மேலாகவும் அங்கீகாரம் வழங்கியது. தொழிலாளர்கள் தம்முடைய சொந்த, கூட்டாகப் போராடும் தகுதிக்கு எதிராக வழக்கறிஞர்களிடமும், தம்மைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கெட்டித்தனம்வாய்ந்த தொழிற் சங்கத் தலைவர்களிடமும் நம்பிக்கை வைக்கும்படி உற்சாகப்படுத்தப்பட்டு, அதற்கிசைய கைத்தொழில் கோர்ட்டுகள், தொழில் விசாரணை மன்றங்கள், சம்பள சபைகள் போன்ற தொடராய் அமைந்த மத்தியஸ்தத்திற்கு விடக்கூடிய முறைகள் கொண்ட ஸ்தாபனங்களை அறிமுகம் செய்தனர்.

இநத அமைப்பு, தொழிலாளர் பணத்திலிருந்து உயர்ந்த சம்பளம் பெறும் தொழிற் சங்க அதிகார வர்க்கத்தினை உருவாக்கியது. தனி நலன்களுக்காக அமைந்த தொழிற் சங்க வேலை அவர்களுக்கு உயர்ந்த லாபம் அளிப்பதாக இருந்தது. அதன் விளைவு முதலாளி வர்க்கம் தொழிற்சங்க இயக்கத்திற்கு மரியாதை கொடுக்கத் தொடங்கியது மட்டுமன்றி, ஒரு தனிரக தொழிற் சங்கத் தலைமைப் பீடத்தை மிகுந்த மரியாதையுடனை ஒரு நிலைக்கு கொண்டுவந்தது. தன்னுடைய விதியை முதலாளித்துவ அமைப்புடன் இணைத்துள்ள, அதன் நலன்களில் அக்கறை கொண்ட இந்தத் தனிரக தொழிற்சங்க தலைமைப் பீடம், நன்கு சம்பளம் பெறும் உத்தியோகஸ்தர்களினதும், சிலவேளை ஒரு பரிவாரம் வழக்கறிஞர்களின் உதவியுடன் பெரிய கட்டிடங்களில் அமைந்த நன்கு அலங்கரிக்கப்பட்ட காரியாலயங்களிலிருந்து இயங்கத் தொடங்கின.

### இலங்கையில் தொழிற் சங்க இயக்கம்

இதுபோன்ற ஊழல் நிறைந்த தொழிற்சங்க இயக்கமும் அதன் விளைவாக எழுந்த தொழிற்சங்க அரசியலும் பல நாடுகளில் அதிக தூரம் சென்றுள்ளன. இந்தப் புற்றுநோய் இலங்கையையும் தாக்கியிருக்கிறது. தனக்கு எதிரில் அமர்ந்து பேச்சுவார்த்தை நடத்தும் முதலாளியிலும் பார்க்க பணவசதி படைத்த தொழிற் சங்கத் தலைவர்களைச் சந்திப்பது இலங்கையில்கூட கஷ்டமான ஒரு விஷயமல்ல. இதுபோன்ற சீர்திருத்த தொழிற் சங்கவாதமும், தொழிலாளர் போராட்டங்களைப் பொருளாதாரப் போராட்டத்திற்குக் கட்டுப்படுத்தும் நிலையும்தான் தொழிலாளர்களிடையே நியாயமான அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கிறது. தொழிற்சங்க வேலையே படுபிற்போக்கானது; எனவே, அது முற்றுகத் தவிர்க்கப்பட வேண்டும் என்ற துரதிர்ஷ்டவசமான உணர்வு எழுவதற்கும் இவையே காரணமாகும்.

மார்க்ஸ் காலத்திலிருந்து இருந்துவரும் இச் சர்ச்சை உண்மையில் ஒரு புதிய விஷயமல்ல. ஆனுலும், நாமும் இது குறித்து சிறிது ஆராய்வோமாக. எது எப்படியிருந்தபோதிலும், சகல தொழிற் சங்க வேலையிலும் ஓரளவு சீர்த்திருத்தவாதக் கலப்பு இருக்கத்தான் செய்கிறது என்பதை நாம் முதலில் சொல்லியே ஆகவேண்டும். மார்க்ஸ் கூறியதுபோல, தொழிற் சங்கப் போராட்டங்களில் ஈடுபடும்போது நாம் விளைவுகளுக்காகப் போராடுகிறோமே தவிர காரணங்களுக்காக அல்ல. எல்லாத் தொழிற் சங்கப் போராட்டங்களும் தற்பொழுதிருக்கும் முதலாளித்துவ அமைப்பிற்குள் தொழிலாளர் நிலையை அபிவிருத்தி செய்ய முயற்சி செய்வதால் அவற்றில் சீர்திருத்தவாத முத்திரை பொறிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, நாம் எமது போராட்டங்களை பொருளாதாரப் போராட்டங்களோடு கட்டுப்படுத்திக்கொள்வோமேயானுல் எமது நடவடிக்கைகள் கீழான தூய சீர்திருத்தவாத நிலைக்குத் தாழ்ந்து போவதுடன், எந்த முதலாளித்துவ அமைப்பின் கீழ் சிறு சலுகைகளைத் தொழிலாளிவர்க்கத்திற்குப் பெற்றுக் கொடுக்கிறோமோ அந்த முதலாளித்துவ அமைப்பைப் பாதுகாக்கத் துணை செய்தவர்களாவோம்.

ஆனுல், அதே நேரத்தில், தொழிலாளி வர்க்கம் தொழிற் சங்கப் போராட்டங்களைத் தவிர்க்க முடியாது என்பதையும் நாம் உணரவேண்டும். மனித சரித்திரத்தில் முதல் தடவையாக உழைப்பு சக்தி என்பது முதலாளித்துவத்தின் கீழ் ஒரு பண்டமாக ஆக்கப்பட்டுள்ளதோடு, இந்த முதலாளி வர்க்கம் உழைப்பு சக்தியின் விலையைப் பற்றி விவாதிக்க வேண்டியதின் அவசியத்தை தொழிலாளி வர்க்கத்தின்மேல் திணிக்கவும் முயற்சிப்பதிலிருந்து இது எழுகிறது. ஆகவே, இது உழைப்பு சக்தியை ஒரு பண்டமாக விற்கவேண்டிய அவர்களின் நிலையுடன் இணைந்த ஒரு விஷயமாகும்.

தொழிலாளர்கள் இப் போராட்டத்தை நடத்தாவிட்டால் ''விமோசனம் அற்ற நிலையில் சிதைந்துபோன உபயோகமற்ற கூட்டம் என்ற ஒரு கீழ்நிலைக்கு தள்ளப்பட்டு விடுவார்கள்'' என்று மார்க்ஸ் சுட்டிக்காட்டினுர். ''முதலாளித்துவ உற்பத்தியின் பொது நோக்கு சம்பளத்தின் சராசரித் தரத்தைத் தாழ்த்துவதேயன்றி உயர்த்துவதல்ல; அல்லது, தொழில் சக்தியை ஓரளவு ஆகக் குறைந்த வரையறைக்குத் தள்ளுவதே'' என்று மார்க்ஸ் மேலும் சுட்டிக் காட்டியதிலிருந்து இது எழுகிறது. ஆகவே மார்க்ஸ் கூறியபடி ''சம்பளத்தை உயர்த்தும் அவர்களின் முயற்சி நூற்றுக்குத் தொண்ணூற்றென்பது வீதம் உழைப்பில் ஏற்படுத்தப்பட்ட பெறுமதியை நிலைநிறுத்தலேயாகும்.''

இது எல்லாத் தொழிலாளர்களும் விளங்கிக்கொள்ள வேண்டிய ஒரு விஷயமாகும். இரண்டாவது உலக மகா யுத்தத்திற்குப் பின்பு கிடைத்த சம்பளத்திலும் பார்க்க இன்றைய சம்பளம் இரண்டு மடங்காக, சிலவேளை மூன்று மடங்காகக்கூட அதிகரித்திருந்தபோதிலும், இந்த ''அதிகரித்த'' சம்பளத்தின் மூலம் ஒரு தொழிலாளி வாங்கக்கூடிய ஒரு ''கூடை பொருட்கள்'' அதே அளவிற்கு அதிகரித்து விடவில்லை. வேறு வார்த்தையில் கூறுவதானுல் அவனுடைய உண்மையான சம்பளம் அநேகமாக ஒரு அளவிலேயே நிற்கிறது. ஆகவே, மார்க்ஸ் கூறியபடி, சம்பளத்தை உயர்த்துவதற்காகத் தொழிலாளர் நடத்தும் எல்லாப் போராட்டங்களும், யதார்த்தத்தில், உழைப்பு சக்தியினுல் ஏற்படுத்தப்பட்ட பெறுமதியை அதே நிலையில் நிலைநிறுத்துவதற்கான முயற்சியேயாகும்.

### வர்க்கப் போராட்டத்தின் ஒரு உருவம்

ஆகவேதான், இத் தொழிற் சங்கப் போராட்டங்கள் தவிர்க்க முடியாதவை. மார்க்ஸ் அவற்றை என்றும் நிற்காத மூலதனத்தின் ஆக்கிரமிப்பிலிருந்து அல்லது சந்தையின் மாற்றத்திலிருந்து இடைவிடாது வெளிக்கிளம்பும் தவிர்க்க முடியாத கொரில்லா போர் என்ருர். மேலும், தொழிற் சங்கப் போராட்டமானது, தொழிலாளி வர்க்கம் அரசியல் போராட்டத்தில் முதிர்ச்சியடைவதற்கு வழிவகுக்கும் மிகவும் ஆரம்ப அமைப்புக் கொண்ட வர்க்கப் போராட்டமாகும். ஒரு தொழிலாளி அரசியல் போராட்டத்தின் அவசியத்தை முதலில் பொருளாதாரப் போராட்டத்தில் பங்கெடுப்பதன் மூலம்தான் அறிந்துகொள்கிருன். இந்தப் போராட்டங்களின்போதுதான் அவன், முதலாளி வர்க்க சுரண்டலைப் பாதுகாப்பது பாராளுமன்றம் அல்ல என்றும் ஆயுதப் படைகளை முக்கியமாகக் கொண்ட—ஏகாதிபத்தியவாதிகள், நிலப்பிரபுத்துவவாதிகள், பெரும் முதலாளித்துவவாதிகள் ஆகியோரால் உருவாக்கப்பட்ட அடக்குமுறை அரசு யந்திரமே என்றும் கற்றுக்கொள்கிருன். அதன் பின்புதான், சுரண்டும் வர்க்கங்களின் காவல்நாய்களின் கைகளில் இருக்கும் துப்பாக்கிகளிலே உண்மை அதிகாரம் இருக்கிறது என்பதை உணர்ந்து கொள்கிருன். இதுபோன்ற பொருளாதாரப் போராட்ட அனுபவங்களிலிருந்தே, சில காலகட்டத்தில், பொருளாதாரப் போராட்டம் சுரண்டலை ஒழிக்கும் போராட்டமான அரசியல் போராட்டமாக மாற்றப்பட வேண்டும் என்பதை தொழிலாளி வர்க்கம் கற்றுக்கொள்கிறது.

### தத்துவார்த்தப்போராட்டம் அத்தியாவசியம்

தொழிலாளி வர்க்கத்தை அரசியல் மயப்படுத்தும் இந்த வேலை; போராட்ட அனுபவங்களிலிருந்தும், வங்குரோட்டுப் பாராளுமன்ற பாதையைப் போதித்து, தொழிற்சங்க அரசியலைக் கடைபிடிக்கும் தொழிலாளி வர்க்க எதிர் கருத்துக்களைப் பிரதிபலிக்கும் திரிபுவாதம், சீர்திருத்தவாதம், பலதரப்பட்ட ட்ரொட்ஸ்கிய வாதங்கள், நவீன திரிபுவாதம் ஆகியவற்றிற்கு எதிராக தத்துவார்த்தப் போராட்டம் நடத்துவதின் மூலமுமே செயல்படுத்தப்பட முடியும்.

தொழிற் சங்கப் போராட்டத்தின் முக்கியத்துவத்தை மிகைப்படுத்தாமலிருப்பதற்கு, அல்லது அவற்றிலேயே ஒரேயடியாக மூழ்கிப் போகாமல் இருப்பதற்கு எமது அங்கத்தவர்களுக்குக் கற்றுக் கொடுப்பது எமது கடமையாகும். பொருளாதாரப் போராட்டத்தை அவ்வப்போது நடாத்தும்பொழுது அவர்கள் விளைவுகளுக்கு எதிராகப் போராடுகிருர்களே தவிர விளைவுகளின் காரணங்களுக்காக அல்ல என்பதையும், அவர்கள் இயக்கத்தின் வேகத்தைக் கட்டுப்படுத்துகிருர்களே தவிர, அதன் திசையைத் திருப்பவில்லை என்பதையும், நோயைத் திரைபோட்டு மறைக்கிருர்களே தவிர குணப்படுத்தவில்லை என்பதையும் கற்றுக்கொடுக்க வேண்டும்.

# பொருளாதா

# அரசியல்

# தத்துவார்த்

முதலாளிகளுக்கு எதிரான பொருளாதாரப் போராட்டங்களில் பங்கெடுத்துக்கொள்வதன் மூலம் தொழிலாளர்களை அரசியல் மயப்படுத்தக் கற்றுக்கொடுப்பது இதனுல்தான் மிகவும் அவசியமானதாகும். உபரி பெறுமதி உற்பத்திக்காக உழைப்பு சக்தியைக் குறைந்த விலையில் விற்க தொழிலாளர்களை எதிர்பார்க்கும் சுரண்டல் அமைப்பை ஒழித்துக்கட்டுவதற்கான அரசியல் போராட்டமாக ஒரு நேரத்தில் மாற்றுவதன் அவசியத்தை உணர்த்தும் இந்தப் பொருளாதாரப் போராட்டம் வர்க்கப் போராட்டத்தின் ஒரு உருவமாகும்.

இதன் சரியான தன்மையை நாம் தெளிவாக மனதிலே பதித்துக்கொள்ள முடியுமாயிருந்தால் - அதாவது நாம் தொழிற்சங்க வேலையில் ஈடுபடுவதன் காரணம் தொழிலாளர்களின் அரசியல் உணர்வை உயர்த்துவது - பொருளாதார, தத்துவார்த்த போராட்டங்கள் மூலம் அவர்களின் வெறுப்புணர்வை ஆழமாக்கி, பொருளாதாரப் போராட்டத்தை அரசியல் போராட்டமாக மாற்றுவதன் அவசியத்தை உணரச் செய்வது, அதாவது முதலாளித்துவ கட்டுக்கோப்பிற்குள் தமது நிலையை விருத்தி செய்வதற்கான போராட்டத்தை, முதலாளித்துவ சுரண்டலை முற்று முழுதாக அழித்தொழிப்பதற்கான போராட்டமாக மாற்றுவது - மேலும் எமது நேரத்தில் அதிகமான அளவு நேரத்தை விரயம் செய்யாமல் இருந்தால், அல்லது தொழிற் சங்கப் போராட்டத்திற்கு தேவையற்ற முக்கியத்துவம் கொடுக்காமல் இருந்தால்,

# புரட்சி மயமாக்குவது எப்படி?

அதாவது எமது எல்லா நடவடிக்கைகளிலும் அரசியலை உயர்மட்டத்தில் வைத்தால் - நாம் புரட்சிகர தொழிற் சங்க வேலை செய்கிறவர்கள் ஆவோம். பொருளாதாரப் போராட்டம் உயர்ந்த அரசியல் போராட்டத்திற்கான அத்திவாரத்தைத் தயார் செய்வதாக இருக்கவேண்டும்.

இதைச் சரியாகப் புரிந்து கொண்டால் தொழிற் சங்க வேலையே பிற்போக்கானதும், தேவையற்றதும் என்று பழித்துரைக்கும் இடதுசாரி சீர்குலைவாத நோக்கத்திற்கு இடமே இல்லை. உலகிலுள்ள எல்லாவற்றின் தன்மைகளும்போல் தொழிற்சங்க வேலையிலும் யும், இன்றைய பிரச்சினைக்கு அதனோடு உள்ள சம்பந்தம் கருதியும், அவரின் முக்கியத்துவம் நிறைந்த இந்தப் பேச்சின் முடிவில் அமைந்துள்ள சில பந்திகளை அப்படியே இங்கு தருகின்றோம்.

''நவீன கைத்தொழிலின் அபிவிருத்தி பாட்டாளிக்கு எதிராகவும் முதலாளிக்கு ஆதரவாகவும் தராசை துரிதகதியில் திருப்பிவிடும் தன்மை உடையது என்றும் அதன் விளைவான முதலாளித்துவ உற்பத்தியின் பொதுவான நோக்கு சம்பளத்தின் சராசரித் தரத்தை உயர்த்துவதாக அல்லாமல் தாழ்த்துவதாகவே உள்ளது. அல்லது தொழிலின் பெறுமதியை

''அதே நேரத்தில் சம்பள அமைப்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள பொது அடிமைத்தனத்திற்கு முற்றிலும் புறம்பாக தொழிலாளி வர்க்கம் இத் தினசரிப் போராட்டத்தின் இறுதி வேலைத் திட்டத்தை தங்களுக்குள் மிகைப்படுத்திக் கொள்ளக் கூடாது. விளைவுகளுக்கான காரணங்களுடன் அன்றி விளைவுகளுடன் அவர்கள் போராடுகிறார்கள்; கீழ்நோக்கி இயங்குவதைக் கட்டுப்படுத்தச் செய்கிறார்களே தவிர அதைச் திசை திருப்பிவிடவில்லை; நோயைத் திரைபோட்டு மறைக்கிறார்களே தவிர குணப்படுத்தவில்லை என்பதையும் அவர்கள் மறந்துவிடக் கூடாது. ஆகவே, என்

புக்கு எதிரான எதிர்ப்பின் மத்தியஸ்தானங்களாகவே நன்கு வேலை செய்கின்றன. தமது சக்தியை தவறான முறையில் பிரயோகிப்பதன் காரணமாக அவைகள் ஒரு பகுதியில் தோல்வி அடைகின்றன. தமது அணிதிரட்டப்பட்ட சக்திகளை தற்போதைய அமைப்பையே மாற்றுவதற்கு பிரயோகிக்காமல், தொழிலாளி வர்க்கத்தின் இறுதி விடுதலைக்கு அதாவது, சம்பள அமைப்பை அழிப்பதற்கு பிரயோகிக்காமல், தற்போதைய அமைப்பின் விளைவுகளுக்கு எதிராக கொரில்லா போர் நடத்துவதற்கு கட்டுப்படுத்துவதாலேயே அவைகள் பொதுப் படையாக தோல்வியடைகின்றன.''

### இருவழி மாற்றங்களையும் அனுமதிக்கக் கூடாது

மார்க்ஸின் அறிவு நிறைந்த இந்த வார்த்தைகளை நாம் கத்திற்கு நாம் சொல்லிக் கொடுக்க வேண்டும். நாம் வசிப்பது வர்க்க சமுதாயத்தில்; இந்த வர்க்க சமுதாயத்தில் ஒரு வர்க்கம் இன்னொரு வர்க்கத்தை அடக்கிவைத்துச் சுரண்டுகிறது. இந்த நிலை வர்க்கப் போராட்டத்திற்கு எழுச்சி கொடுக்கிறது. அடக்கியொடுக்கி நசுக்கப்படும் வர்க்கத்தை தொடர்ந்து அடக்குவதற்காக அடக்கும் வர்க்கம் பெரும் செலவில் அரசு என்னும் யந்திரத்தைக் கட்டி வளர்த்திருக்கிறது. இந்த யந்திரத்தின் முக்கியமான அங்கம் ஆயுதப் படைகளே. இந்த அரசு யந்திரத்தின் பாதுகாப்பினுல்தான் சுரண்டல் தொடர்ந்து நடக்கிறது. தொழிலாளி வர்க்கமும் மற்றும் அடக்கப்படும் வர்க்கங்களும் தங்கள் அடிமை நிலையையும், அடக்கு முறையையும் அகற்ற வேண்டுமானுல் சுரண்டுவோரின் காவல் நாயாகச் செயல்படும் இந்த அடக்கு முறை அரசு யந்திரத்தைத் தகர்த்து அதனிடத்தில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்று மார்க்ஸினுல் கூறப்பட்ட தொழிலாளி வர்க்கத்தின் அரசு யந்திரத்தை அமைக்க வேண்டும். வேறு வார்த்தைகளில் கூறுவதானுல் பலாத்காரப் புரட்சியின் மூலமே இதைச் செய்ய முடியும்; பாராளுமன்றத்தினுள் சமாதான மாற்றத்தினுல் அல்ல.

ஆனபடியால்தான், எமது கடந்த மாநாட்டில், கடும் முயற்சியின் மூலம் அங்கத்தவர்களை அரசியல் மயப்படுத்தும்படியும், சீர்திருத்த தொழிற் சங்கவாதம் என்ற ஆழமான சேற்றிலிருந்து அவர்களை வெளியே எடுக்கும் படியும், புரட்சிகர உணர்வுடன் தொழிற் சங்க அலுவல்களில் ஈடுபட அவர்களை வழிநடத்தும் படியும் எமது எல்லாச் சங்கங்களுக்கும் அறைகூவல் விடுக்கும் தீர்மானங்களை நிறைவேற்றியிருந்தோம்.

இந்தத் தீர்மானங்கள் எல்லா அங்கத்தவர்களாலும் ஒரே மாதிரி அமுல் நடத்தப்பட்டிருக்கின்றன என்று கூற முடியாது. சில சங்கங்கள் நல்ல முன்னேற்றமடைந்திருக்கின்றன; மற்றவை முன்னேற்றமடையவில்லை. இந்த வேறுபாடு சீர்திருத்தப்பட வேண்டும்.

## ...ாதாரப் போராட்டங்கள்
## ...ல் போராட்டங்களாக எழுச்சிபெற
## ...ர்த்த போராட்டம் நடத்த வேண்டும்

இரண்டு தன்மைகள் இருக்கின்றன. ஒன்று நல்லது, மற்றது கெட்டது. எம்மைப் பொறுத்தவரையில் புரட்சிகர தொழிற்சங்க வேலைக்கும், சீர்திருத்தவாத தொழிற்சங்க வேலைக்கும் இடையில் பாகுபாடு காண நாம் கற்றுக் கொள்ள வேண்டும். நாம் முன்னையதை ஆதரித்து பின்னையதை எதிர்க்கிறோம்.

### பிழையான கருத்துக்கு எதிராக மார்க்ஸ் போராடினார்

தொழிற் சங்கம் வகிக்கும் பாத்திரம் பற்றிக் கூறும்பொழுது இந்தச் சர்ச்சை மார்க்ஸ் காலத்திலிருந்து தொடர்ந்து வந்திருக்கின்றது என்று நாம் முன்புகூறியிருக்கிறோம். ஜோண் வெஸ்டென் என்னும் ஆங்கிலேயத் தொழிலாளி சர்வதேச உழைப்பாளிகள் சங்கப் பொதுச் சபையில், உயர்ந்த சம்பளங்கள் தொழிலாளர்களின் நிலைமையை அபிவிருத்தி செய்துவிட முடியாது என்றும், தொழிற் சங்கங்கள் கெட்ட விளைவுகள் உள்ளதாகக் கருதப்பட வேண்டும் என்றும் தனது கருத்தை முன்வைத்திருந்தார். 1865ம் ஆண்டு ஜூன் மாதம் 20-27ம் திகதிகளில் நடந்த சர்வதேச உழைப்பாளிகள் சங்க பொதுச் சபையில் இரண்டு நாள் கூட்டத்தின்போது, மார்க்ஸ் இதற்குப் பதிலுரைக்கும் முகமாக ஓர் உரை நிகழ்த்தினுர். இவரின் உரை, மதிப்பு, விலை, லாபம் என்ற தலைப்பில் ஓர் தனிப் பிரசுரமாக ஆரம்பத்தில் வெளியிடப்பட்டது.

மார்க்ஸின் இந்த உரையில் அடங்கியிருக்கும் கருத்துக்களின் முக்கியத்துவம் கருதி முடியுமான அளவு அதன் குறைந்த பட்ச வரையறைக்குத் தள்ளுவதே'' என்றும் விளக்குவதற்கு இச் சில கருத்துக்கள் போதுமானதாக இருக்கின்றன. இந்த அமைப்பில் உள்ள விஷயங்களின் தன்மை இப்படியாயிருக்கும் பொழுது, தொழிலாளி வர்க்கம் மூலதனத்தின் ஆக்கிரமிப்புக்கு எதிரான எதிர்ப்பைக் கைவிட வேண்டும் என்றும், அவர்களின் தற்காலிக விருத்திற்குச் சாதகமாக அவ்வப்பொழுது கிடைக்கும் சந்தர்ப்பங்களிலிருந்து பெறக்கூடிய நன்மைக்கான முயற்சியைக் கைவிட வேண்டும் என்றும் கூறுவது சரியா? அவர்கள் அப்படிச் செய்தால், விமோசன நிலைகடந்த, சீர்குலைந்த, பரிதாபத்திற்குரிய மனிதக் கூட்டம் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுவிடுகள். சம்பளத் தரத்திற்கான அவர்களின் போராட்டம் முழு சம்பள அமைப்பிலிருந்தும் பிரித்தெடுக்க முடியாத சம்பவங்கள் என்றும், 100க்குத் 90 சந்தர்ப்பங்களில் சம்பளத்தை உயர்த்துவதற்கான அவர்களின் முயற்சி, ஏற்படுத்தப்பட்ட தொழிலின் பெறுமதியை நிலைநிறுத்துவதற்கான முயற்சியே என்றும், அவற்றின் பெறுமதியை முதலாளித்துவ வாதியுடன் விவாதிக்க வேண்டிய அவசியம் அவற்றைச் சரக்காக விற்க வேண்டிய அவர்களின் நிலைமையுடன் இணைக்கப்பட்டிருப்பதே என்றும் உங்களுக்குக் காட்டியிருப்பதாக நினைக்கின்றேன். மூலதனத்திற்கெதிரான தினசரி மோதலில் அவர்கள் கோழைத்தனமாக விட்டுக் கொடுப்பார்களேயானுல் பெரும் இயக்கத்தை ஆரம்பிப்பதற்கு தங்களை நிச்சயமாகத் தகுதியற்றவர்களாக ஆக்கிவிடுவார்கள்.

றுமே நிற்காத மூலதனத்தின் ஆக்கிரமிப்பிலிருந்து அல்லது சந்தையின் மாற்றத்திலிருந்து தொடர்ச்சியாகக் கிளம்பும் தவிர்க்கமுடியாத கொரில்லாச் சண்டையில் அவர்கள் ஒரேயடியாக மூழ்கிவிடாமல் இருக்க வேண்டும். தற்போதைய அமைப்பு, பல துன்பங்களைத் திணிக்கும் அதே வேளையில், சமூகத்தின் பொருளாதார புனர்நிர்மாணத்திற்கான பொருள் நிலைமைகளையும், சமூக அமைப்புகளையும் உற்பத்தி செய்கிறது என்பதையும் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். ''நியாயமான நாள் வேலைக்கு ஏற்ப நியாயமான நாள் சம்பளம்'' என்ற பழைய கொள்கைக்குப் பதிலாக, ''சம்பள அமைப்பை அழித்தொழித்தல்'' என்ற புரட்சிகர புதுமொழியை தமது பதாகைகளில் பொறித்துக் கொள்ள வேண்டும்.

''எடுத்துக்கொண்ட விஷயத்திற்கு நியாயம் அளிக்கும் முகமாக நான் கொடுக்க வேண்டியிருந்த இந்த நீண்ட களைப்பை உண்டாக்கக் கூடிய விளக்கத்திற்குப் பின்பு, இப்பொழுது கீழ்க்கண்ட தீர்மானங்களைப் பிரேரிப்பதன் மூலம் இதை முடித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முதலாவதாக, சம்பள விகிதத்தில் ஒரு பொது உயர்வு லாப விகிதத்தில் ஒரு பொது வீழ்ச்சியை விளைவிக்கும் என்றுலும் பொருட்களின் விலையைப் பாதிக்காது.

இரண்டாவதாக, முதலாளித்துவ உற்பத்தின் பொது நோக்கம் சம்பளத்தின் சராசரித் தரத்தைத் தாழ்த்துவதே தவிர உயர்த்துவதல்ல.

மூன்ருவதாக, தொழிற்சங்கங்கள் மூலதன ஆக்கிரமிப்

ஜீரணித்து சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். இடதுசாரி வழி மாற்றத்தையோ அல்லது வலதுசாரி வழி மாற்றத்தையோ நாம் எங்களுக்குள் அனுமதிக்கக் கூடாது. அதாவது, புரட்சிகர உணர்வுடன் தொழிற் சங்க வேலை செய்ய மறுக்காத, அதே வேளையில் முதலாளி வர்க்கமும் அதன் அரசாங்கமும் எங்கள் மேல் என்றுவது திணிக்கப்பட வேண்டி இருக்கும் பலாத்காரத்திலிருந்து பாதுகாப்புக் கொடுக்கக்கூடிய குறுகிய எல்லைகளுக்குள் எமது தொழிற் சங்க நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்திக்கொள்ள இடங் கொடுக்கக் கூடாது.

தொழிலாளி வர்க்கத்தின் குறைந்த சம்பளத்திற்கும் துயரமான வாழ்க்கைத் தரத்திற்கும் காரணம் ஏகாதிபத்தியவாதிகளினுலும் முதலாளித்துவ வாதிகளினுலும் நடத்தப்படும் கடும் சுரண்டலே என்பதை கற்றுக் கொடுக்க வேண்டும். வெளிநாட்டு ஏகாதிபத்திய தனி நலன்கள் எமது பொருளாதாரத்தைத் தொடர்ந்து அடிமைப்படுத்தி வருவதன் காரணமாக எழும், தொடர்ச்சியான பொருளாதார குழப்பங்கள் காரணமாக எழும் தொடர்ச்சியான பொருளாதார குழப்பங்கள் காரணமாக இந்த நிலை மேலும் மோசமாக்கப்பட்டுள்ளது. ஆகவே, வெளிநாட்டு ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம், பெரும் முதலாளித்துவம் ஆகியவற்றைத் தூக்கி வீசாவிட்டால் தொழிலாளி வர்க்கம் தனது பொருளாதார நிலைமைகளை சிறிய அளவிலேனும் விருத்தி செய்துகொள்ள முடியாது என்பதையும் போதிக்க வேண்டும்.

### தொழிலாளி வர்க்கத்திற்கு போதிக்க வேண்டியவை

இவற்றுடன் கீழ் வருவனவற்றையும் தொழிலாளி வர்க்

### பிற்போக்கு வாதிகளின் தத்துவப் பிரச்சாரம்

தினமும், ஒவ்வொரு மணித்தியாலமும் தொழிலாளர்களின் மனதைக்கெடுப்பதற்கென பிற்போக்குவாதிகளினுல் நடத்தப்படும் பரந்த தத்துவார்த்த இயக்கத்தைப்பற்றி உங்களின் கூரிய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறோம். ஊழல் நிறைந்த பிரச்சார சாதனமான பூர்ஷுவா பத்திரிகை மூலமும், வானொலி திரைப்படங்கள், பிரச்சார வகுப்புகள் ஆகியன மூலமும் இது நடைபெறுகின்றது.

6-ம் பக்கம் பார்க்க

# புரட்சிகர தொழிற்சங்க இயக்கத்தை ஸ்தாபிப்போம்

◎ 5-ம் பக்கத் தொட

எமது உள்ளங்கள் எந்தக் காலமும் வெற்று நிலையில் இருந்ததில்லை. முதலாளித்துவ கருத்துக்களோ அல்லது பாட்டாளி வர்க்கக் கருத்துக்களோ அவற்றில் நிறைந்திருக்கும். இந்த இரண்டு தத்துவங்களுக்குமிடையில் சமாதான சகஜீவனம் என்ற எண்ணத்திற்கு இனிமேலும் எமது மூளையில் இடமே இல்லை. இரண்டில் ஒன்று வெற்றிபெற்றே தீரும். தொழிலாளர்களின் மூளைகளில் பாட்டாளி வர்க்க தத்துவம் வெற்றி பெறுவதற்கு உதவுவது எமது கடமையாகும்.

அரசியல் வகுப்புகள், விரிவுரைகள், எமது வாரப் பத்திரிகைகளான ''கம்கருவா'', ''தொழிலாளி'' ஆகியவற்றை ஒழுங்காகப் படித்தல் மார்க்சிஸம்- லெனினிஸம்- மாசேதுங் சிந்தனையை தீவிரமாகவும், ஒழுங்காகவும் படித்தல், எல்லாவற்றிற்கும் மேலாக வர்க்கப் போராட்டத்தில் கலந்து கொள்ளல் ஆகியவற்றின் மூலமே இதைச் சாதிக்க முடியும். எமது கிளைகள் உள்ள பல தொழிற்சாலைகளிலும், டிப்போக்களிலும், தோட்டங்களிலும் எமது வாரப் பத்திரிகைகள் விற்பனை நடைபெறுமல் இருப்பது மனவருத்தத்திற்குரிய ஒரு விஷயமாகும். இது உடனடியாகத் திருத்தப்படவேண்டும். எம்மை எல்லாத் திக்குகளிலும் சூழும் இந்த பிற்போக்கு தத்துவார்த்த இயக்கத்திற்கு எதிராகப் போராடுவதற்கு எம்மிடமிருக்கும் தத்துவார்த்த ஆயுதங்கள் நாம் அச்சிடும் இவ் வாரப் பத்திரிகைகளும், புத்தகங்கள், சிறு பிரசுரங்கள், துண்டுப் பிரசுரங்களுமேயாகும். எல்லாச் சங்கக் கிளைகளும் எமது வாரப் பத்திரிகைகளான ''கம்கறுவா''வையும் ''தொழிலாளி''யையும் விற்பனை செய்வதை தங்கள் கடமைகளில் முக்கியமானதாகக் கொள்ள வேண்டும்.

### தொழிற் சங்க ஐக்கியம்

இப்பொழுது, தொழிற்சங்க ஐக்கியத்தைப் பற்றிச் சில வார்த்தைகள் கூற விரும்புகிறோம். இலங்கையில் தொழிற் சங்க இயக்கத்தின் சாபக்கேடு அதன் ஐக்கியமின்மையே, இதன் காரணமாகத்தான், நியாயமான அளவு இயக்கரீதியாகக் கட்டி வளர்க்கப்பட்டிருக்கின்ற பொழுதிலும் தொழிலாளி வர்க்கம், முதலாளிகளிடமிருந்து தமது கோரிக்கைகளைப் பெற முடியாமல் இருக்கின்றது. எவ்வளவுதான் ஒரு முனைவாத வித்தியாசங்கள் இருந்த போதிலும் தொழிலாளர் தமது பொருளாதாரக் கோரிக்கைகளை வென்றெடுப்பதற்கு முன்னோடியாக அவர்கள் ஐக்கியப்படவேண்டியது அவசியம் என்று சொல்லி வந்திருக்கிறோம். அதனால் தான், இலங்கை தொழிற் சங்க சரித்திரமே என்றும் கண்டிராத 21 கோரிக்கைகளுக்குப் பின்னால் ஏற்பட்ட ஐக்கிய இயக்கத்தை ஆரம்பித்து வைப்பதற்கு முன்னின்று உழைத்தோம்.

சமசமாஜ தலைமைப்பீடமும், கெனமன் திரிபுவாத கும்பலும் இந்த ஐக்கியத்தைத் தமது சொந்த சந்தர்ப்பவாத நலன்களுக்காக உடைத்தெறிந்ததும், அதன் விளைவாக எல்லாத் தொழிற் சங்க நடவடிக்கைகளுக்கும் அவர்கள் ஒரு தடைகல்லாக அமைந்ததும் இன்னும் 1967ம் ஆண்டு தனியார் துறை வேலைநிறுத்தத்தையும், 1968ம் ஆண்டு அரசாங்கத்துறை வேலை நிறுத்தத்தையும் காட்டிக் கொடுத்ததும், நாம் என்றுமே புறக்கணிக்க முடியாத பாடங்களாக அமைந்திருக்கின்றன. இந்தக் காலங்களில், விசேஷமாக 1967ம் ஆண்டு தனியார் துறை வேலை நிறுத்தத்தின் போது ஐக்கியம் ஏற்படுத்துவதற்காக நாம் எவ்வளவு பிரயத்தனங்கள் செய்தோம் என்பதையும், முக் கூட்டு தொழிற் சங்கத் தலைவர்கள் முக்கியமாக அவற்றில் கெனமன் திரிபுவாதக் கும்பலைச் சேர்ந்தோர் எமது முயற்சிகளை எவ்வளவு தூரம் தூக்கி வீசினார்கள் என்பதையும் எமது அங்கத்தவர்கள் நன்கு அறிந்திருக்கிருர்கள். இதுதான் அந்த வேலை நிறுத்தத்தின் தோல்விக்குக் காரணம் என்பதும் அவர்களுக்கு நன்கு தெரியும். தமது பொருளாதார நிலைமைகளை விருத்தி செய்வதன் அவசியத்தை உணரத் தலைப்பட்டிருக்கும் எல்லாத் தொழிலாளர்களின் ஐக்கியத்திற்கு இன்றும் நாம் முன்னிற்கும் அதேவேளையில்- இந்த ஐக்கியப்படுத்தும் முயற்சியை வேலை நிறுத்த காலங்களின் போது பலதரப்பட்ட அரசியல் கருத்துக்கள் கொண்ட தொழிலாளர்களுக்கிடையில் முன்கொண்டு செல்லத் தயாராயிருக்கும் அதே வேளையில்- லெனின் அன்று தனது கால ரஷ்யாவைப் பற்றிக்கூறும் பொழுது சுட்டிக் காட்டிய, ''தற்போதைய சமூகக் கட்டுக்கோப்பிற்குள் தொழிலாளர்களின் பௌதீக நிலைமைகளை எப்படி அபிவிருத்தி செய்ய முடியும் என்பது சம்பந்தமாக கூட 'அரசியல் கருத்து வேறுபாடுகள்' புகுத்தப் பட்டிருக்கின்றன'' என்ற அவரின் கூற்றை நன்கு உணர்ந்துகொள்ள வேண்டும். இந்த அபிவிருத்தியை நாம் புறக்கணித்து விட முடியாது.

### விழிப்புத் தேவை

சமுதாயத்தில் புரட்சிகர மாற்றத்தை விரும்பாத சமசமாஜக் கட்சித் தலைவர்களும், கெனமன் திரிபுவாதக் கும்பலும், ''பாட்டாளி வர்க்கப் போராட்டத்தை மழுங்கடிக்கக் கூடிய'' தன்மை வாய்ந்த தொழிற் சங்கப் போராட்டங்களை விரும்புவது இயற்கையானதே. இந்த அடிப்படையில் நாம் ஐக்கியத்தை விரும்ப முடியாது. அதே நேரத்தில் பாட்டாளி வர்க்க விடுதலைக்கு உத்வேகம் கொடுக்கக் கூடிய போராட்டங்கள் கொண்ட தொழிலாளர் ஐக்கியத்தைத் தவிர்த்து தொழிலார்களின் வாழ்க்கைத் தரத்தை மட்டும் அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான ஒற்றுமையை இவர்கள் முன்னணியில் வைப்பதற்கு எதிராக நாம் மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டும்.

தொழிற் சங்க இயக்கத்தைப் பிளவுபடுத்தும் ஆழ்ந்த தொழிற் சங்க பிளவுகளுக்கிடையே கீழ்மட்டத்திலிருந்துதான் ஐக்கியம் உருவாக முடியும். மேல் மட்டத்திலிருந்தல்ல. 1963-64ல் நடந்தது போன்ற ஒரு ஐக்கியத்தை தலைவர்களிடையே இப்பொழுது நினைத்துப் பார்ப்பது வெறும் கனவாகும். தொழிலாளர்கள் ஐக்கியத்தை தமது கைகளின் எடுத்துக்கொள்ள வேண்டும். அவர்கள், பலதரப்பட்ட தொழிற் சங்க மத்தியஸ்தான தலைவர்களினதும் கடந்தகால நடவடிக்கைகளையும், அவர்களின் வர்க்க குணங்களையும் துருவி ஆராய்ந்து தமது தெரிவைச் செய்ய வேண்டும்.

தொழிலாளி வர்க்கத்தைத் தொடர்ச்சியாகக் காட்டிக் கொடுத்து. அதன் உழைப்பைச் சுரண்டி வாழும் சமசமாஜக் கட்சித் தலைமையும், கெனமன் திரிபுவாதக் கும்பலும். தொண்டமானும் இவர்களைப் போன்ருேரும் சுரண்டலை ஒழித்துக் கட்டுவதற்கு தொழிலாளி வர்க்கத்திற்கு தலைமை அளிக்க முடியுமா? இதற்குத் தெளிவான பதில் ''இல்லை'' என்பதே.

ஆதலால் தான், ஒரு புரட்சிகர வேலைத் திட்டத்தின் அடிப்படையில் புரட்சிகர நடவடிக்கைக்காக தொழிலாளி வர்க்கத்தைக் கீழ் மட்டத்திலிருந்து ஐக்கியப்படுவதற்கான பெரும் வேலையைத் தொழிலாளர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் எனக் கோரி அழைப்பு விடுகிருேம். அவர்களுடைய நலன்களே இதில் அடங்கியுள்ளதால் வேறு எந்த வழிகளும் அவர்களுக்கு வெற்றியைத் தேடித்தர முடியாது.

அதேவேளையில், தொழிலாளி வர்க்கத்தின் முழு ஐக்கியத்தையும் ஏற்படுத்தும் எமது முயற்சியின் ஒரு அங்கமாக இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்தின் பலத்தை மேலும் கட்டி வளர்ப்பதற்கு எம்மாலான எல்லா முயற்சிகளையும் நாம் செய்ய வேண்டும்.

# தலைவர் மாஓவின் 77வது பிறந்த தினம்

◎ 3-ம் பக்கத் தொடர்

தான் அவர் சாதித்த மிக மகத்தான சாதனையாகும். புரட்சியின் தலையாய சக்தி பாட்டாளி வர்க்கமே என்றும் பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் கட்சியின் மூலமே-கம்யூனிஸ்ட் கட்சியின் மூலமே இத் தலைமை அளிக்கப்பட வேண்டும் என்றும் அவர் சீன வெகுஜனங்களுக்குப் போதித்தார். சீன ஜனத்தொகையில் பெரும்பான்மையினரான விவசாயிகளுடன், பாட்டாளி வர்க்கம் ஐக்கியப்பட்டால் மாத்திரமே பாட்டாளி வர்க்கத்தினுல் புரட்சியை வெற்றிநோக்கி வழிநடத்த முடியும் என்றும், தொழிலாளர் வர்க்கத்தின் தலைமையின் கீழ் தொழிலாளர்களும், விவசாயிகளும், இதர புரட்சிகர பகுதியினரும் கூட்டாகத் தொடுக்கும் மக்கள் யுத்தமொன்றின் மூலமாக மாத்திரமே புரட்சி வெற்றிக்கான முடியும் என்றும் அவர் போதித்தார். வேறு வார்த்தைகளில் கூறுவதானுல், தொழிலாளர்-விவசாயி ஐக்கியமே புரட்சிகர ஐக்கிய முன்னணியின் அத்திவாரம் என்றும், மக்கள் யுத்தத்தின் மூலம் மட்டுமே எதிரியை முறியடிக்க முடியும் என்றும் அவர் போதித்தார்.

### மார்க்சிஸ-லெனினிஸத்தின் ஆக்கபூர்வமான அபிவிருத்தியாகும்

மக்கள் யுத்தம் பற்றிய தோழர் மாசேதுங்கின் தத்துவம், அரசு பற்றிய மார்க்சிஸம்—லெனினிஸத் தத்துவத்தின் ஆக்கபூர்வமான அபிவிருத்தியேயாகும். ஏகாதிபத்தியவாதிகளதும், பிற்போக்காளர்களதும் கைகளில் வாள்கள் இருக்கின்றன, அவர்கள் மக்களைக் கொல்லத் தயாராயுள்ளனர் என்றும் அவர் விளக்கினுர். எனவே, வெகுஜனங்கள் எதிர்த்துப் போராட வேண்டுமேயானுல், அவர்களும் தமது கைகளில் வாள்களை வைத்துக் கொண்டு எதிரியுடன் பொருத வேண்டும். அரசு யந்திரம் வேகமாக இராணுவமயப்படுத்தப்பட்டு வருவதனுல், எதிரியின் பலம் நகரங்களிலேதான் ஒரு முகப்படுத்தப்பட்டிருக்கிறது என்றும் அவர் விளக்கினுர். மக்களது சக்தியைப் பார்க்கிலும் ஆரம்பத்தில் எதிரியின் சக்தி கூடுதலாக இருக்கும் வேளையில், எதிரியை அவன் வலிமையோடு இருக்கும் ஸ்தானத்தில் வைத்துத் தாக்குவது வீண் செயலாகும். எனவே, நாம் எதிரியின் பலஹீனமான ஸ்தானங்களை எமது சக்தி மிக்க ஸ்தானங்களாக மாற்றும் தந்ரோபாயத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். வேறு வார்த்தைகளில் கூறுவதனுல், நாம் வெகுஜனங்களை அணிதிரட்ட வேண்டும். அதற்கு எதிரி பலஹீனமாகவும் நாம் பலமாவும் இருக்கக் கூடிய கிராமப்புறப் பிரதேசங்களுக்குச் செல்லவும் கிராமங்களில் புரட்சிகர தளப் பிரதேசங்களைக் கட்டியெழுப்பவும், அங்கு மக்கள் படையொன்றைக் கட்டியெழுப்பிப் பயிற்றுவிக்கவும், தற்காலிகமாகப் பலமிக்கவனுயுள்ள எதிரிக்கு எதிராக நீண்ட கால மக்கள் யுத்தமொன்றைத் தொடுக்கவும், கொரில்லா யுத்தமுறை மூலமாக எதிரிப் படைகளை ஒன்றன் பின் ஒன்ருக நாசஞ் செய்யவும், இறுதியில் எதிரியைப் பார்க்கிலும் பலமான நிலையை அடையவும், கிராமங்களைக் கொண்டு சுற்றி வளைப்பதன் மூலம் நகரங்களை விடுதலை செய்யவும் வேண்டும். வளைந்து கொடுக்கக் கூடிய இத் தத்துவத்தைத்தான் மக்கள் யுத்தம் என்று அழைக்கின்ருேம்.

### மகத்தான பாட்டாளி வர்க்க கலாச்சாரப் புரட்சியின் மூலகர்த்தா

சோஷலிஸப் புரட்சிக்குப் பின்னர் கூட வர்க்கங்களும் வர்க்கப் போராட்டங்களும் தொடருகின்றன என்பதையும், புரட்சிவாதிகள் விழிப்புணர்ச்சியை இழந்து விடாமல் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் வர்க்கப் போராட்டத்துக்குத் தலைமையளிக்கவும், சோஷலிஸப் புரட்சியைப் பூரண வெற்றி நோக்கி இட்டுச் செல்லவும் கற்றுக் கொள்ளவும் வேண்டும் என்பதையும் தெட்டத் தெளிவாக விளக்கி வைத்ததன் மூலம் தோழர் மாஓ மார்க்சிஸம் — லெனினிஸத் தத்துவத்தை செழுமைப்படுத்தியுள்ளார். மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியைத் தாமே முன் நின்று துவக்கி வைத்து, அதற்குத் தலைமையளித்தன் மூலமாக இதனை எவ்வாறு செய்யலாம் என்பதை அவர் எடுத்துக் காட்டினுர். மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின் மூலம் அவர் சீனத்தில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைப் பாதுகாக்கவும், பலப்படுத்தவும், ஸ்திரப்படுத்தவும் செய்ததுடன், சோவியத் யூனியனில் நிகழ்ந்ததைப் போல சீனுவிலும் முதலாளித்துவத்தை மீண்டும் தலைதூக்கச் செய்யும் பாதையில் செல்ல விடாமல் தடுத்து, சீனத்தை உலகப் புரட்சியின் செந்தளமாகப் பாதுகாத்துள்ளார்.

### மகத்தான மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்

மேற்குறிப்பிட்ட சாதனைகளில் எதுவுமே ஒரு மனிதரை மகா புருஷராக ஆக்கியிருக்கும், ஆனுல், மேற்குறிப்பிட்ட மகத்தான வெற்றிகள் யாவற்றையும் ஈட்டுகையில் தோழர் மாசேதுங் எமது சகாப்தத்தின் மகத்தான மார்க்சிஸ்ட் — லெனினிஸ்ட்டாக, மாசேதுங் சிந்தனை என்று நாம் கூறுகின்ற புதிய கட்டத்துக்கு மார்க்சிஸம்—லெனினிஸத்தை ஆக்கபூர்வமாக விருத்தி செய்துள்ள மகத்தான மார்க்சிஸ்ட்—லெனினிட்டாகியுள்ளார். ''ஏகாதிபத்தியம் பூரண அழிவு நோக்கிச் செல்லுகின்ற. சோஷலிஸம் உலகந் தழுவிய வெற்றியை நோக்கி நடை போடுகின்ற'' சகாப்தத்தில், அதாவது, உலகப் புரட்சியின் சகாப்தத்தில் மார்க்சிஸம்—லெனினிஸத்தின் உச்சகட்ட வளர்ச்சியே மாசேதுங் சிந்தனையாகும். எனவேதான், இன்று ஓர் புரட்சிவாதிக்குள்ள பரீட்சை, அவர் மாசேதுங் சிந்தனையை ஏற்றுக் கொள்கின்ருரா என்பதுதான். லெனின் வாழ்ந்த காலத்தில் எவராவது லெனினிஸத்தை நிராகரித்தால் அவர் உண்மையில் மார்க்சிஸத்தையே நிராகரித்தவராவார். அதுபோன்றே இன்று, எவராவது மாசேதுங் சிந்தனையை நிராகரித்தால் அவர் உண்மையில் மார்க்சிஸம்—லெனினிஸத்தையே நிராகரிக்கின்ருர்.

# "இந்தியாவின் சீன யுத்தம்"

◎ 2-ம் பக்கத் தொடர்

ருந்து சீனப்படைகள் வெகு தூரம் பின்வாங்க வேண்டும் என்றும் நிபந்தனை விதித்துக் கொண்டிருந்தது.

இந்தியாவின் இந்தப் பிடிவாதம் எத்துனை அபத்தமானது என்பதை நிருபிக்கும் வகையில், நூலின் 64ம் பக்கம் தொடக்கம் சீன—இந்திய எல்லைகளின் வரலாற்று வளர்ச்சியை விபரிக்கிருர் மாக்ஸ்வெல். மறுக்க முடியாத சான்று ஆதாரங்களைத் தொகுத்துக் காட்டுகிருர்.

''வரலாற்றுப் பதிவேடுகளின் படி 1899-ம் ஆண்டிற்குப் பிறகு வடமேற்கு எல்லையை ஒழுங்கு அமைப்பது பற்றி, சீனுவை உடன்பாடு கொள்ளச் செய்வது பற்றிப் பிரிட்டன் மேற்கொண்டு முயற்சி செய்யவில்லை. நேபாளத்திலிருந்து ஆப்கானிஸ்தான் வரையுள்ள பிராந்தியத்திலும் சரியான எல்லை நிர்ணயிக்கப் படாமலேயே இருந்தது. இந்த நிச்சயமின்மையே இத்துணைக் கண்டத்தி பிரிட்டிஷ்காரர்களிடமிருந்து ஆட்சி அதிகாரம் பெற்ற இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும், மக்கள் சீனக் குடியரசுக்கும் 20-ம் நூற்ருண்டின் மத்தியில் ஒரு பிரச்சனைக்கு ஏதுவாயிற்று.''

- தொடரும்

## விமர்சனம்

# 'வானம் சிவக்கிறது'

இன்று உலகில் ஏகாதிபத்திய, பெருமுதலாளித்துவ சுரண்டல்கள், அடக்குமுறைகள் என்பனவற்றுக்கெதிராக, பரவலாக உழைக்கும் மக்கள் எழுப்பியுள்ள போர்க்குரலையும், விழிப்புணர்ச்சியுடன் இயக்கரீதியாக அவர்கள் நடத்தும் போராட்டத்தையும், வீரஞ்செறிந்த அவர்களின் மகத்தான தியாகங்களையும் சமூக உணர்வுள்ள எந்த ஒரு இலக்கிய ஆசிரியனும் புறக்கணித்து விட முடியாது. இலக்கியம் கலை என்பவை இன்றைய முதலாளித்துவ சகாப்தத்தில் சந்தைக்குரிய விலைப் பொருளாகி மலினப்பட்டு மிகப்பயங்கரமான தனி மனிதவாதம், இழிந்த பாலுணர்ச்சி, கொலை முதலியவற்றைக்கூறும் சாதனமாகும் நிலையிலும் மக்களின் போராட்ட இயக்கங்களால் உந்துதல் பெற்று புத்துணர்ச்சி கொண்ட இலக்கிய படைப்புகள் ஆங்காங்கு வெளிவந்து கொண்டிருக்கின்றன. இவற்றை முற்றுமுழுக்க கட்சி இலக்கியங்கள் என்றோ, மார்க்சிஸம்-லெனினிஸம்-மாசேதுங் சிந்தனையின் கலைருபங்கள் என்றோ சொல்ல முடியாவிடினும் இவற்றில் மக்கள் சார்பையும், போராட்ட ஆதரவையும், அடக்குமுறையின் சகல வடிவங்களையும் எதிர்க்கும் போக்கையும் கண்டுகொள்ளலாம். இவை எமக்கு மகிழ்ச்சி தரக் கூடிய போக்குகளாகும்.

இலங்கையிலும் ஆங்காங்கு போராட்டத்தின் தீ கொழுந்துகள் தோன்றத்தொடங்கிவிட்டன. மலைநாட்டில் தோட்டத் தொழிலாளரின் கிளர்ச்சிகள், யாழ்ப்பாணத்தில் நிலப்பிரபுத்துவ சுரண்டல் அடக்குமுறைக்கெதிரான தாழ்த்தப்பட்ட மக்களின் எழுச்சிகள், மாணவர் போராட்டங்கள் புரட்சிகர உணர்வின் ஸ்தூல வடிவங்களாகத் தெரிகின்றன, இப் புரட்சிகர உணர்வைத் தாங்கியும், போராட்டத்தின் மத்தியில் பிறந்தும் சமீபத்தில் சில இலக்கியப் படைப்புகள் வந்துள்ளன. புதுவை இரத்தினதுரையின் ''வானம் சிவக்கிறது'' மிகச் சமீபத்தில் வந்த கவிதைத் தொகுப்பு.

ஆரம்பத்தில் பலரையும் போலவே காதற் கவிதைகள் பாடிக் கவிதையுலகில் பிரவேசித்த கவிஞர். அவையே முதலும் முடிவும் எனக்கொண்டு மயங்கிவிடவில்லை. அவரை மக்களின் போராட்டங்கள் ஈர்த்திருக்கின்றன. போராட்ட நடைமுறை அனுபவங்களில் இருந்து பெற்ற பாடங்கள் இவரது கவிதைப்போக்கை மிகவும் மாற்றியுள்ளன. 'என்னுரை'யில் இதுபற்றிக் கூறுகிறார் இரத்தினதுரை. கலையும் இலக்கியமும் மக்களுக்குத்தானென்ற கோட்பாட்டுக்குள் தன்னைத் திணித்துக்கொண்ட வளர்ச்சியின் அறிகுறியாகவே இத்தொகுதியில் உள்ள பல பாடல்கள் வெளிவந்திருக்கின்றன. ஏனெனில் ''உண்மைக் கவிதைகள்'' என்ற பாடலில் மக்கள் வாழ்வுடன் இணைந்தவை, அவர்களில் உறங்கிக் கிடக்கும் புரட்சிகர உணர்வை தட்டியெழுப்புபவையே கவிதைகள் என்ற கருத்தை அவர் ஒப்புக்கொள்வதைக் காண்கிறோம். 'மாற்றப்பாடு' என்ற கவிதையிலும் புதியமாற்றத்தை வரவேற்று, புரட்சியை முன்தள்ளும் இலக்கியங்களே எமக்கு வேண்டும் என்ற கொள்கை உள்ளது.

''காற்றினை, காவை, ஓடும்
கார்முகில் தன்னைப் பாயும்
ஆற்றினை அழகுப் பெண்ணை
அலைகடல் தன்னை வைத்து
சாற்றிடில் கவிதை தன்னில்
சாறிலை, ஏழை வாழ்வை
மாற்றிடக் கவிதை பாடில்
மலருமே புதிய வையம்''

தலைவர் மாஓ யெனுன் கருத்தரங்கில் பின்வருமாறு கூறினார்:

''விரோதியைத்தோற்கடிப்பதற்கு நாம் முதன்மையாகத் துப்பாக்கிகள்ஏந்தியபடையிற்தான் தங்கி நிற்க வேண்டும், ஆனல், இந்தப்படை மட்டும் போதாது; எமக்கு கலாச்சாரப்படை ஒன்றும் இருக்க வேண்டும்; எமது சொந்த அணிகளை ஐக்கியப்படுத்துவதற்கும் விரோதியைத் தோற்கடிப்பதற்கும் இந்த கலாச்சாரப் படை அறவே இன்றியமையாதது.''

போராட்டத்தில் இலக்கியம் கலை ஆகியவற்றின் இடம் பற்றிய இந்த உண்மையை புதுவை இரத்தினதுரையும் உணர்ந்துள்ளார் என்றே தோன்றுகிறது.

இந்த உணர்வுடனே அவர் புரட்சி ஓங்கும்', 'வாழ்க்கை நடத்திடப் போரே,' 'மக்களாட்சி காணவே, 'விடிவை நோக்கி' 'தொடங்க வேண்டும்' என்னும் பாடல்களை எழுதியுள்ளார்.

நடைமுறையிலிருந்து பெற்ற அனுபவங்களும் அதனடிப்படையாகப் பிறந்த பாடங்களும், நம்பிக்கையுணர்வும், உறுதியும் இவரது பாடல்களின் சிறப்பம்சங்களாயுள்ளன.

''விளைத்தவ னறுத்தல் நீதி
வீதியிற் சும்மா வாயால்
அளப்பவன் தலைமை யேற்கும்
அழிநிலை போக்கி யிங்கு
உழைப்பவன் கொடிகள் தூக்கி
உரிமையைக் கேட்டா லங்கு
முளைத்திடும் புரட்சி தன்னில்
முடியுமே சுரண்ட லாட்சி''

விளைத்தவனுக்குப் பயிர் சொந்தமற்று, அவன் பசியால் வாடும் நிலைமையையே நீதியாக்கிவிட்ட இந்தச் சமுதாயத்தில் 'விளைத்தவனறுத்தலே நீதி' என்ற கோஷத்தை எழுப்பும் போர்க்குரலையே காண்கிறோம். ஏழை பணக்காரன் என்ற பாகுபாடு, வறுமை, சுரண்டல், அடக்குமுறை என்ற கொடுமைகள் உபதேசங்களாலும், உயர் வர்க்கத்தினரின் மனமாற்றத்தினாலும் மறைந்துவிடும் என்ற நம்பிக்கையும், இவை யாவும் விதிப்பயனே என்று அடங்கியிருப்பதும் நடைமுறை உண்மைகளைப் பார்க்கும்போது மாறிவிடுகிறது. உலகில் ஏனைய மக்களின் போராட்டங்களும் அவை ஈந்த பயன்களும் மற்றவர்களையும் புரட்சியில் நம்பிக்கைக் கொள்ளத் தூண்டுகின்றன. இதனை கவிதையாகக் கூறுகின்றார் கவிஞர்.

''புதிய தோருலகைக் காணப்
புறப்பட்ட தீரர் நாங்கள்
கதியெமக் கொன்று மில்லை
கடைசியில் வழிதானென்று
அதுதரும் ரத்த வெள்ளம்
ஆயினும் வழி வேறின்றி
இது, தரும் பாதையென்று
எழுந்தனம் புரட்சி செய்ய''

''நெற்றி வேர்வை நிலத்தில் சிந்த
நீடுயிர்க்கும் தோழனே
பற்றுமந்தப் புரட்சித் தீயில்
பாதையொன்றுதெரியுதே''

புரட்சித்தீயில் பாதையைக் கண்ட கவிஞர் பாராளுமன்ற ஜனநாயகம் என்று சொல்லி ஏய்க்கும் முதலாளிவர்க்கத்தின் கைப்பொம்மையாகிய பாராளுமன்ற அரசு யந்திரத்தை முற்றாக நிராகரிக்கின்றார்.

''போதுமிந்தப் பொம்மையாட்சி
பொழுது சாயு முன்னரே
மாதரும் எழுந்து வாரீர்
மக்களாட்சி காணவே''

'பொம்மையாட்சி' என்ற கருத்து சகல ஆட்சி நிறுவனங்களையும், தற்போது இலங்கையில் அதிகாரத்தில் இருக்கும் ஆட்சியையுமே குறிக்கிறது. உயர் வர்க்கங்கள் மக்கள் மீது தமது பிடியை இருக்கிவைத்துக்கொள்ள உபயோகிக்கும் சாதனங்களில் அரசு ஒன்று. அது மக்களைச் சுரண்டும் கருவியாக அதைச் சிருஷ்டித்த வர்க்கத்துக்கே பயன்படுகிறது. உண்மையில் பாராளுமன்ற ஆட்சி என்பது ஒரு பொம்மலாட்டம் தான். அதனை இயக்கும் சூத்திரதாரிகள் ஏகாதிபத்திய, நிலப்பிரபுத்துவ, முதலாளித்துவ வர்க்கத்தினர். எமது நாட்டு ஆட்சி முறையே இதற்குச் சிறந்த உதாரணம். இந்த ஆட்சியின் முடிவு பாட்டாளி மக்களின் கையிலேயே தங்கியுள்ளது. கவிதையின் இறுதியடிகள் இவ்வாறு முடிகின்றன.

''கூவுமெங்கள் குரல்கள்செல்வ
கோட்டைதன்னையிடிக்குமே
நாளையெங்கள் கைகளோங்கி
நாடு தன்னையாளுமே''

சரித்திர இயக்கவியலின் நியதியையும், புரட்சியின் விளைவையும் நம்பிக்கையுணர்வுடன் தன்னையும் போராட்டத்துடன் இணைத்த தன்மை நிலையில் நின்று கூறி முடிக்கிறார் கவிஞர்.

கவிஞர் யாழ்ப்பாணப் பகுதியை சேர்ந்தவர். அங்கு நிலப்பிரபுத்துவ அடக்குமுறையின் மிச்சசொச்சமான சாதி முறைக்கும், அதன் கோரத்தனமான வன்முறைகட்கும் எதிராக தாழ்த்தப்பட்ட வகுப்பினர் எனப்படும் உழைக்கும் மக்கள் போராட எழுந்துள்ளனர். அவர்களது போராட்டம் நீண்டது. சாத்வீகப் போராட்டம் என்ற தத்துவம் இறுதியில் மக்களைக்காட்டிக் கொடுப்பதற்காகவே என்றும் பயன்பட்டதை அவர்கள் அனுபவவாயிலாகக் கண்டனர். ஆயுதமேந்தி, ரத்தம் சிந்தி, தியாகங்களின் ஒளியில் நடத்திய போராட்டங்களே அவர்கள் பாதையில் வெற்றிக் கதவுகளை திறந்ததை உணர்ந்தனர். இந்த அனுபவ உண்மையை அவர் கண்டிருக்கிறார். போராட்ட வழியே வெற்றிக்கு வழி என்று பாடியவர் வரலாற்றுணர்வுடன் தாழ்த்தப்பட்ட மக்களின் குரலை ஒலிக்கிறார்.

''வில்லு ஊன்றிச் சுடலையிலே
விழுந்த சூட்டால் எங்கள் மனம்
கல்லு ஆகி விட்டதடா
கடவுள் வந்து முன்னாலே
நில்லு என்று சொன்னாலும்
நில்லோம் தள்ளோம் இது வுண்மை
வெல்லும் எங்கள் போராட்டம்
விடிவை நோக்கி நடக்கின்றோம்.''

1944ம் ஆண்டு வில்லூன்றிச் சுடலையில் ஆரியகுளத்து முதலி சின்னதம்பி சுடப்பட்டுஇறந்ததில் இருந்து சமீப காலம்வரை தாழ்த்தப்பட்ட மக்களின்

### ''ஈஸ்வரி''

வீரஞ்செறிந்த போராட்டம் இரத்தத்தால் எழுதப்பட்டு வந்துள்ளது. அதையே இங்கு குறிக்கிறார் கவிஞர்.

இவ்வாறு பல சிறப்புகளை இத் தொகுதியில் காணும் அதே நேரம் நேர் எதிரான குறைபாடுகளையும் முரண்பாடுகளையும் சுட்டிக் காட்டவேண்டியுள்ளது. ஏனெனில் அம் முரண்பாடுகள் வர்க்க கண்ணோட்ட மற்ற படுகுழிக்குள் தள்ளி அமிழ்த்திவிடும். உதாரணமாக 'அண்ணுதுறை' பற்றிய பாடலில் தமிழர், திராவிடர், வடவர் என்ற கோஷம் காணப்படுகிறது. எப்போதும் வர்க்கங்களைக் கடந்த இன, மத, மொழி ஒற்றுமை இல்லை; வர்க்க ஒற்றுமையும், வர்க்க வேறுபாடுமே என்றும் காணப்படுவது. திராவிடர், வடவர் என்ற கோஷம் தென்னாட்டுத் தேசிய முதலாளி வர்க்கம் தான் முதன்மை பெறுவதற்காக முன்வைத்த கோஷம். இதில் எவரும் மயங்கிவிடக் கூடாது. கவிஞருக்கு அந்த மயக்கம் இருக்கிறது என்பதையே ''நெஞ்சத்தே நிறைந்த அண்ணு'' கவிதை காட்டுகிறது. அண்ணுதுரையின் வரலாற்றுப் பாத்திரத்தை உணர்ந்திருந்ததால் அண்ணுதுரையின் ''பொதுவுடமைக்'' கொள்கையைப் பாராட்டும் நிலை கவிஞருக்கு வந்திருக்காது. தேசிய முதலாளித்துவ வர்க்கம் அரசியலங்கில் பிரவேசித்து ஆட்சியைக் கைப்பற்றுவதற்குத் தன்னுடன் தொழிலாளி வர்க்கத்தையும் சேர்த்துக் கொள்கிறது. தொழிலாளி வர்க்க ஆதரவுடனேயே அது ஆட்சியையும் கைப்பற்றுகிறது. அந்த ஆதரவைப்பெற, சோஷலிஸம், பொதுவுடமை, சமதர்மம் என்ற கோஷங்களை அது முன்னுக்கு வைக்கிறது. தென்னிந்தியாவில் தி. மு. கழகம், பாரதிதாசன், கண்ணதாசன் ஆகியோரின் சமதர்மப் பாடல்களையும், இனவெறிப் பாடல்களையும் தனது கோஷமாக்கியது. இந்த வகையில் தென்னாட்டின் தேசிய முதலாளி வர்க்கம் உருவாக்கிவிட்ட பாத்திரமே அண்ணுதுரை. இதை உணர்ந்துகொண்டால் சமதர்மவாதி என அண்ணுதுரையைப் பாட வராது.

தத்துவத்தெளிவும் மார்க்சிஸ அடிப்படையிலான கூர்ந்த அறிவும் இருந்தால் எந்த நபரையும், எந்த அரசியல், மத, பொருளாதார இயக்கங்களையும் இனங்கண்டுகொள்ள முடியும். இதனை, நடைமுறை உண்மைகளை ஊன்றி அவதானிப்பதன் மூலமும், மார்க்சிஸம்-லெனினிஸம்-மாசேதுங் சிந்தனையை ஊன்றிக் கற்பதன் மூலமும், போராட்டங்களில் ஈடுபடுவதன் மூலமும் பெற்றுக் கொள்ளலாம். இவை இன்று மக்கள் இலக்கியம் படைப்பவனுக்கு இன்றியமையாதவை.

இறுதியாக ஒன்று: கவிதைகளை எழுதிய தேதிகளைக் கவிஞர் குறிப்பிட்டிருந்தாரானல் அவரது வளர்ச்சிப் போக்கைக் காட்ட உதவியாய் இருந்திருக்கும்.

எனினும், மொத்தத்தில் நோக்கும்போதே, இன்று இலங்கையில் வெளியாகும் கவிதைத் தொகுப்புகளுடன் ஒப்பிடுகையில் 'வானம் சிவக்கிறது' நம்பிக்கையளிப்பதாகவேயுள்ளது. இருபத்திரெண்டு வயதை எட்டிப்பிடித்திருக்கும் இளங்கவிஞர் மேலும் பயிற்சியும் தெளிவும் பெற்று வாளிலும் கூர்மையான பாடல்களை மக்கள் இயக்கத்துக்கு அளிப்பாரென எதிர்ப் பார்க்கிறோம்.

## இரங்கல்

மடுல்சீமைப் பகுதியில் விராலிபத்தனை தோட்டத்தைச் சேர்ந்த தோழர் வி. முருகையா அண்மையில் அகால மரணமடைந்தார். தோழர் வி. முருகையா இத் தோட்டத்தில் செங்கொடி வாலிபர் சங்க காரியதரிசியாகவும், இலங்கை தோட்டத் தொழிலாளர் செங்கொடி சங்கத்தின் முக்கிய அங்கத்தவராகவும் செயல் பட்டார்.

தோழர் முருகையாவின், குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இலங்கைத்
தோட்டத் தொழிலாளர்
செங்கொடி சங்கம்.

# போலந்தில் புரட்சிப் புயல் கொந்தளிக்கிறது

அண்மையில் போலந்தில் நடைபெற்ற எழுச்சிகள் போலந்து திரிபுவாதத் தலைவன் கொமுல்காவை வீழ்ச்சியடையச் செய்துள்ளன. இது, போலந்து திரிபுவாத ஆளும் கும்பலுக்குக் கிடைத்த மாபெரும் தோல்வி; அங்குள்ள சோவியத் சமூக ஏகாதிபத்திய வாதிகளின் தரகர்களுக்குக் கொடுக்கப்பட்ட பேரடி. இச் சம்பவங்கள் சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தையும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் அதன் கைப்பொம்மையாகவுள்ள திரிபுவாதக் கும்பல்களையும் நொறுங்கவைக்கும் தாக்கத்தைக் கொடுத்துள்ளது. இவைகள் சோவியத் சமூக ஏகாதிபத்திய சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சியை முன்னறிவித்தலாகக் காட்டுகின்றன. அத்துடன், திரிபுவாதிகளால் ஆளப்படுகின்ற நாடுகளில் இவற்றைவிடப் பெரிய போராட்டங்களும் நடைபெறும் என்பதையும் இது எடுக்காட்டுகிறது.

பலகாலமாகப் போலந்து, சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தின் காலனி நாடாக இருந்து வந்துள்ளதோடு, முதலாளித்துவ மீட்சிப் பாதையையும் பின்பற்றியது. இச் சமயத்தில், நிலம் தேசிய மயமாக்கப்படாமலும், நிலத்தின் பெரும்பகுதி. தனியார் சொத்தாகவும் உள்ள திரிபுவாத நாடுகளில் போலந்தும் ஒன்று என்பதை நாம் நினைவில் வைத்திருக்க வேண்டும். மிக அண்மைக் காலங்களில், அமெரிக்கா, இங்கிலாந்து, மேற்கு ஜெர்மனி, இத்தாலி ஆகிய நாடுகளின் மூலதனமும் இங்கு வேர் ஊன்றி உள்ளது. இவைகள் யாவும் ஒன்றுதிரண்டு இன்று போலந்தில் பொருளாதாரப் பிரச்சனையைக் கிளப்பியுள்ளன.

மேலும், மேற்கத்திய கலாச்சாரத்தின் தீய செல்வாக்கும் போலந்தில் ஊடுருவி உள்ளது. விபச்சாரம், கள்ள வியாபாரம், மோசடி யாவும் மிகவும் மலிந்துள்ளன. அத்துடன் திரிபுவாதிகளால் ஆளப்படும் நாடுகள் எல்லாவற்றையும் விட போலந்தில் கத்தோலிக்க சபையின் ஆதிக்கம் அதிகம். இவைகள் யாவும் ஒன்றுதிரண்டு போலந்து மக்களுக்கும், அவர்களை அடக்கும் திரிபுவாதிகளுக்குமிடையில் ஒரு மோதலை உருவாக்கியுள்ளன.

''எல்லா நாடுகளிலும் முழு ஜனத்தொகையின் 90 வீதத்திற்கு மேற்பட்டோர், நிச்சயம் புரட்சி செய்வார்கள்; மார்க்சிஸம்—லெனினிஸத்தை நிச்சயம் ஆதரிப்பார்கள்; திரிபுவாதத்தை ஆதரிக்க மாட்டார்கள். சில மக்கள் சில நேரங்களில் திரிபுவாதத்தை ஆதரித்தாலுங்கூட அவர்கள் இறுதியாகத் திரிபுவாதத்தை ஒதுக்கி வைப்பார்கள். எல்லா நாடுகளிலும் மக்கள் ஏகாதிபத்தியவாதிகளையும், பிற்போக்குவாதிகளையும் கட்டாயம் எதிர்த்தே தீருவார்கள். அவர்கள் திரிபுவாதத்தையும் எதிர்ப்பார்கள்.'' என தலைவர் மாஓ கூறியுள்ளார்.

தலைவர் மாஓவின் இக்கூற்று போலந்தில் உண்மை என நிரூபிக்கப்பட்டுள்ளது. தொழிலாளி வர்க்கம், மாணவர்கள், பெண்கள், வெகுஜனங்கள் ஆகியோரால் நடத்தப்பட்ட பெரிய ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை அடக்குவதற்குப் பல அடக்குமுறைகளைத் திரிபுவாதிகள் கையாண்டனர். பட்டாளங்களையும், டாங்கிகளையும் அனுப்பி அவர்களை அடக்க எத்தனித்தனர். நகரங்களில் ஊரடங்குச் சட்டத்தைப் பிறப்பித்தனர். உத்தியோக ரீதியான கணக்கெடுப்பின்படி, ஆளும் பிற்போக்குவாதிகளின் இரக்கமற்ற குண்டாந்தடிப் பிரயோகத்தால் 20 பேர் கொல்லப்பட்டனர்; நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர். இவைகள் போதாதென்று, இந்தத் திரிபுவாத ஆளும் கும்பல் சூழ்ச்சிகள் செய்யத் தொடங்கியது. கொமுல்கா தனது தலைமைப் பீடத்திலிருந்து இறங்கினான். இன்னொரு திரிபுவாதி எட்வேட் கெரிக் அப்பதவியைப் பெற்றான். எட்வேட் கெரிக் தலைமைப் பதவிக்கு வந்தவுடனேயே, சோவியத் திரிபுவாதத்துடன் ''ஒன்று சேர்ந்து'' போகும் தனது எண்ணத்தைப் பிரகடனப் படுத்தினான். சிற்சில பொருளாதார சலுகைகளும் தருவதாகக் கூறினான்.

ஆனால், கொமுல்காவிற்குப் பதிலாக இன்னொரு திரிபுவாதப் பிரமுகரை வைப்பது போலந்தில் உள்ள ஆழ்ந்த முரண்பாடுகளுக்குக் கொடுக்கக் கூடிய தீர்வு அல்ல. போலந்து திரிபுவாதிகளின் இச் செயல் தலையிடிக்குத் தலையணியை மாற்றுவதைப் போன்றதாகும். தினசரிப் பாவனைப் பொருட்கள், உணவுப் பொருட்கள், துணிகள் ஆகியவற்றின் விலைகள் ஒரு குடும்பத்திற்குச் சராசரி 20 வீதத்தால் அண்மையில் அதிகரித்ததே, போலந்து மக்கள் மிகவும் அதிருப்தியடைந்ததற்கும் அவர்களின் பலமான எதிர்ப்புக்கும் உள்ள உடனடிக் காரணமாகும். இங்கே பற்றாக்குறையும், வறுமையும் வானளாவியுள்ளன. இதனால் போலந்து மக்கள் மிகவும் உக்கிரமான அடக்குமுறைக்கும் சுரண்டலுக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளார்கள்.

ஆனால், இதுவல்ல முக்கிய காரணம்; இதன் அடிப்படைக் காரணம் வேறு. திரிபுவாத ஆளும் கும்பலின் சோஷலிஸ விரோத, எதிர்ப் புரட்சிவாதக் கொள்கைகள் போலந்தில் பல வருடங்களாகக் கடைப்பிடிக்கப்பட்டதே இதன் அடிப்படைக் காரணமாகும். போலந்து மக்கள் தங்கள் இரத்தத்தையும், வியர்வையையும் சிந்தி வென்றெடுத்த சோஷலிஸ நன்மைகளை இக்கும்பல் நாசமாக்கிவிட்டது. ஒரு புதிய பூர்ஷுவா வர்க்கம் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ளது. பொருளாதார சீர்திருத்தம் எனப்படும் கொள்கையால் கொமுல்காக் கும்பல் சோஷலிஸ பொருளாதாரத்தின் மார்க்சிஸம்-லெனினிஸத்தின் கோட்பாடுகளைச் சீரழித்து விட்டார்கள். அத்துடன் முதலாளித்துவ நாடுகளில் பூர்ஷுவா வர்க்கம் லாபத்தைச் சூறையாடுவதைப் போன்று இங்கும் ஒரு புதிய வர்க்கம் ஒரு காலமும் இல்லாத பெருந்தொகையான லாபத்தைச் சேர்ப்பதற்கு வசதியான சூழ்நிலையையும் உருவாக்கிவிட்டார்கள்,

போலந்து அரசாங்கப் புள்ளி விபரங்களின்படி ஏறத்தாழ 200,000 தொழிலாளிகள் முதலாளித்துவ அடக்குமுறையின் கீழ் வேலை செய்கின்றார்கள். இதிலும் பெரிய தொகையினர் தனியார் துறைகளில் வேலை செய்கிறார்கள். 50,000திற்கும் அதிகமான மோசடிகாரர்கள் இருக்கிறார்கள். 200,000 பேர் கள்ள வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளனர் போலந்தின் நாட்டுப்புறப்பகுதிகளில் முதலாளித்துவம் மிகவும் வேகமாக வளர்ந்துவிட்டது. விவசாயம் செய்யப்படும் நிலத்தில் 85 வீதம் இப்போது தனியார் உடைமையாகும். விவசாயப் பொருட்களைப் பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்த போலந்தை இன்று 20 லட்சம் தொன் தானியங்களையும், வேறு புல் வகைகளையும் இறக்குமதி செய்யும் ஒரு நாடாக மாற்றி அமைத்துள்ளார்கள். இங்கு பால், மா, இறைச்சி, பாண் ஆகியவற்றிற்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளன.

போலந்தில் உள்ள தொழிலாளர்களும், வெகுஜனங்களும், இத் திரிபுவாதக் கும்பலை வெறுப்பதற்கும், எதிர்ப்பதற்கும் இவைகளே காரணங்கள். இவைகள் திரிபுவாத புதிய பூர்ஷுவா வர்க்கத்திற்கும் போலந்து மக்களுக்குமிடையே உள்ள முரண்பாட்டைக் காட்டுவதோடு, நவீன திரிபுவாதிகளால் தம்பட்டம் அடிக்கப்படும் அவர்களின் பொருளாதாரச் சீர்திருத்தத்தின் பங்கலோட்டுத்தனத்தையும் அம்பலப்படுத்துகின்றன. அதே சமயத்தில், ''சோஷலிஸ சமூகத்தின் பரஸ்பர பொருளாதார உதவி'' என்ற ஸ்தாபனத்தை ஆயுதமாகப் பாவித்து போலந்தில் சோவியத் திரிபுவாத சமூக ஏகாதிபத்தியவாதிகள் தமது அரசியல் ஆதிக்கத்தையும், பொருளாதார கொள்ளையையும் உக்ரப்படுத்துவதையும் நிரூபிக்கிறது.

போலந்தில் நடைபெறும் இப் புரட்சிகர எழுச்சிகள் போலந்து தொழிலாள வர்க்கமும், மக்களும், சோவியத் திரிபுவாதக் கும்பலால் பயன்படுத்தப்படும் சோவியத் டாங்கிகளுக்கும், படைகளுக்கும் சிறிதும் பயப்படவில்லை என்பதை காட்டுகின்றன. ஆளும் திரிபுவாதக் கும்பலால் மார்க்சிஸ-லெனினிஸக் கொள்கைகள் கைவிடப்பட்ட போதும், சரியான மார்க்சிஸ-லெனினிஸப் புரட்சிவாதிகளின் தலைமையின்கீழ் மக்கள் சோஷலிஸத்தின் இலட்சியத்தைப் பெறுவதற்கும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை மீண்டும் நிலைநாட்டுவதற்கும் பலம்மிக்க போராட்டங்களைச் செய்வார்கள் என்பதையும் இந் நிகழ்ச்சிகள் விளக்குகின்றன.

போலந்தில் சில பிரதேசங்களில் நடைபெற்றவை மிக விரைவில் இன்னும் கூடிய சக்தியோடு போலந்து நாடு முழுவதும் நடைபெறும். இது திரிபுவாதக் கும்பல் ஆட்சி செலுத்தும் எல்லா நாடுகளிலும் நடைபெறும். பயமுறுத்தலோ, டாங்கிகளோ, பாசிஸ பலாத்காரமோ இதை தடுத்து நிறுத்த முடியாது.

# இ. போ. ச. போனஸ் போராட்டம்......

◎ 1-ம் பக்கத் தொடர்

இல்லை என்றால், 48,000 ரூபாய்கள் செலவழித்து புத்தம் புதிய கார் ஒன்றை இ. போ. ச. தலைவருக்காக இறக்குமதி செய்தது ஏன்? அவருக்கு கார் இல்லையா? பாவித்த கார் ஒன்றை அவரால் பாவிக்க முடியாதா? இ. போ. ச. தலைவருக்கு மாதம் 3,000 ரூபாய்கள் சம்பளம் கொடுப்பது ஏன்? இ. போ. ச. விலுள்ள பெரும் புள்ளிகளுக்கு கொழுத்த சம்பளம் கொடுப்பது ஏன்? 175 ரூபாய்களை தொழிலாளர்களுக்கு போனஸ் கொடுக்க முடியாத போது, எம். பி. மார்களுக்கும், அமைச்சர்களுக்கும் 50 வீதம் சம்பளம் அதிகரிக்கப்பட்டது ஏன்? மாஜி எம். பி. களுக்கு பென்சன் கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டது ஏன்? எம். பி. களுக்கு கார் இறக்குமதி செய்ய முடிவெடுக்கப்பட்டது ஏன்? அமைச்சர்கள், எம். பி. கள், கூட்டுத்தாபன நிர்வாகிகள் அடிக்கடி வெளிநாடுகளுக்குச் செல்வது ஏன்? அமைச்சர்களுக்கு குளிரூட்டப்பட்ட காரியாலயங்கள் கட்டப்படுவது ஏன்? அமைச்சர்கள் அனைவரும் பென்ஸ் கார்களில் பவனி வருவது ஏன்?

இக் கேள்விகளுக்குப் பதில் கிடைக்கவில்லை. எனவே, இ. போ. ச. தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். சில டிப்போக்களில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் படங்கள் கிழித்தெறியப்பட்டன. இது அரசாங்கத்தை அதிர்ச்சி அடையச் செய்துவிட்டது. முக்கூட்டணி தொழிற் சங்கங்களின் நிர்ப்பந்தத்தினால் அரசாங்கம் தந்திரமாக பின்வாங்கியது. போனஸுக்குப் பதிலாக அட்வான்ஸ் அளிக்கப்படும்; இந்த அட்வான்ஸ் பின்னர் சம்பளத்திலிருந்து கழிக்கப்படமாட்டாது என அரசாங்கம் அறிவிக்கும் நிலை ஏற்பட்டது. இது வெறும் வார்த்தை ஜாலமே. எப்படியிருந்தபோதிலும் இ. போ. ச. தொழிலாளர்கள் வெற்றியடைந்தார்கள்.

இந்த வேலைநிறுத்தத்திலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் என்ன? முதலாவதாக, முக்கூட்டணியை தேர்தலில் ஆதரித்த தொழிலாளர்கள் எவ்வளவுதான் வெற்றிப் போதையிலிருந்தாலும் அவர்களுடைய அதிருப்தி வெகுவிரைவாக வளர்ந்து வருகிறது என்பதையே இது எடுத்துக் காட்டுகிறது. இந்த முக்கூட்டணி அரசாங்கத்தின் அரசியல், பொருளாதார பங்கலோட்டுத்தனத்தைத் தொழிலாளர்கள் அறிந்து பின்னர், அவர்கள் அரசாங்கத்தின் ஆதரவாளர்களாக இருந்தபோதிலும் தமது பொருளாதாரக் கோரிக்கைகளுக்காக வேலைநிறுத்தப் போராட்டங்களில் இறங்குவார்கள் என்பதையே இவ் வேலைநிறுத்தம் சுட்டிக்காட்டுகிறது. இரண்டாவதாக, தொழிலாளர்கள் போராட்டங்களுக்குத் தயாராக இருக்கிறார்கள் என்பதை இந்த வேலைநிறுத்தம் எடுத்துக்காட்டியபோதிலும் இத்தகைய போராட்டங்களை முன்னெடுத்துச் செல்லும் புரட்சிகரத் தலைமை இ. போ. ச. வில் இன்னும் உருவாகவில்லை என உணர்த்துகிறது. இந்நிலைமை வெகுவிரைவில் உருவாகும் என்பதில் எமக்கு சந்தேகமில்லை.

மூன்றாவதாக, இன்றைய முக்கூட்டணி அரசாங்கம் சிக்கியுள்ள பொருளாதார நெருக்கடியை இந்த போனஸ் பிரச்சினை தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளது. இது சகல தொழிலாளர்களுக்கும் ஒரு முக்கிய பாடமாகும். மோசமான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிராவிட்டால், எந்தவொரு அரசாங்கமும் போனஸ் தருவதாக வாக்களித்துவிட்டு, கடைசி நேரத்தில் அதை ரத்துச் செய்யமாட்டாது. நிதி அமைச்சர் எவ்வளவுதான் வாய்ச் சவுடால் அடித்தாலும் இந்நாட்டுப் பொருளாதாரம் படுமோசமடைந்துள்ள நிலையை இது துலாம்பரப்படுத்துகிறது.

அண்மையில் சமசமாஜக் கட்சியின் 35வது ஆண்டுவிழாவில் பேசிய பிரதமர் இதை வெளிப்படையாகவே கூறியுள்ளார். ஆனால், பிரதமர் குறிப்பிட்ட இவ் விஷயத்தை பத்திரிகைகள் பிரசுரிக்கவில்லை. வேலை செய்யும்போது நித்திரை செய்வது சோஷலிஸமல்ல என அவர் கூறியதாகச் சொல்லப்படுகிறது. இன்றைய நிலைமை தொடர்ந்து நீடிக்குமானால் போனஸ் மட்டுமல்ல, இன்னும் ஆறுமாதத்தில் சம்பளங்களையும் நிதி அமைச்சர் கொடுக்கமாட்டார் எனவும் பிரதமர் குறிப்பிட்டாராம்.

பிரதமரின் இந்த வார்த்தைகள் நாம் இதுவரை கூறிவருவதை நிரூபிக்கின்றன. இன்றுள்ள ஏகாதிபத்திய, நிலப்பிரபுத்துவ, பெரும் முதலாளித்துவ பொருளாதார அமைப்பை நிர்மூலமாக்காமல், இந்த அமைப்புக்குப் பாதுகாப்பு அளிக்கும் அரசு யந்திரத்தை தவிடுபொடியாக்காமல் முதலாளித்துவ பாராளுமன்றஜனநாயகத்தின் கீழ் எந்தக் கட்சி ஆட்சியில் அமர்ந்தாலும் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை அதனால் தீர்க்க முடியாது என்ற எமது கருத்தை பிரதமரின் பேச்சு மேலும் உறுதியாக்குகிறது.

## புரட்சிகர இலக்கியங்களை

## வாசியுங்கள்!

- மார்க்சிஸம் — லெனினிஸம் — மாசேதுங் சிந்தனை;
- மக்கள் சீனத்தின் வெளியீடுகள்;
- இலங்கையில் வெளியாகும் புரட்சிகர முற்போக்கு நூல்கள்;

ஆகியவை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

**சீன சஞ்சிகைகளுக்கு சந்தாதாரர்கள் சேர்க்கப்**

**படுகிறார்கள். உடனே தொடர்பு கொள்ளவும்**

**தொழிலாளி பிரசுராலயம்**
121, யூனியன் பிளேஸ், கொழும்பு — 2.

**யாழ் புத்தக நிலையம்**
91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

பதிப்பித்து வெளியிடுபவர்: ஏ. ஐயசூரிய, 123, யூனியன் பிளேஸ், கொழும்பு-2, அச்சிட்டது: தொழிலாளி அச்சகம், 121, யூனியன் பிளேஸ், கொழும்பு-2.